வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959

Reg. No. : P. 1632

விலை ரூ. 30/=

# ஈழநாடு

Eelanadu ඊළනාඩු




Email : news@eelanadu.lk | மலர் : 04 | 27.12.2022 செவ்வாய்க்கிழமை | இதழ் : 18 | பக்கங்கள் : 16

## தமிழ்த் தேசியக் கட்சிகள் ஜனவரியில் இரு நாள் பேச்சு

### மாவை சேனாதிராசா சொல்கிறார்

யாழ்ப்பாணம்,டிசெ. 27

தமிழ்த் தேசிய பிரச்னைக்கு தீர்வை ஏற்படுத்துவதற்கான பேச்சு ஜனவரி இரண்டாம் வாரம் நடைபெறவுள்ளது. அதற்கு முன்பாக தமிழ்த் தேசியக் கட்சிகள் வரும் ஜனவரி மாதம் இரு நாள்கள் கலந்துரையாடவுள்ளோம் என்பதை கொழும்பில் ஆராயவுள்ளோம் என்று இலங்கை தமிழரசு கட்சி தலைவர் மாவை சோ. சேனாதிராசா 15

## தீர்வு விடயங்களில் கருத்தாடல் செய்ய சொல்ஹெய்முக்கு அருகதை இல்லை!

### தமிழ் மக்கள் அதை தீர்மானிப்பர் என்கிறது கூட்டமைப்பு

யாழ்ப்பாணம்,டிசெ. 27

இனப் பிரச்னைக்கான தீர்வு விடயங்களில் யார் தலையிடவேண்டும் என்பதை தமிழ் மக்களே தீர்மானிப்பார்கள். அது பற்றிய முடிவுகளை அறிவிக்க சொல்ஹெய்முக்கு எந்த அருகதையும் இல்லை. அவர் ஒரு நாட்டின் பிரதிநிதியோ அல்லது ஓர் இராஜதந்திரியோ அல்ல. அவருக்கு இட்ட பணியை செய்வதே சாலச் சிறந்ததாகும். அதை விடுத்து தமிழ் மக்களின் அரசியல் தீர்வு சம்பந்தமான விடயங்களில் அழையா விருந்தாளியாக கருத்துச் சொல்வது அவசியமற்றது.

- இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பங்காளிக் கட்சியான ரெலோ தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் அந்தக் கட்சியின் ஊடகப் 15

# இந்திய ஆளும் கட்சி முக்கியஸ்தரை ஜனாதிபதி இரகசியமாக சந்திக்கிறார்!





**கொழும்பு, டிசெம்பர் 27**

**இந்தியாவை ஆளும் பிரதமர் மோடி தலைமையிலான பாரதிய ஜனதா கட்சியின் (பா.ஜ.க.) முக்கியஸ்தரான ராம் மாதவை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை நுவரெலியாவில் இரகசியமாக சந்தித்து உரையாடவுள்ளார் என்று அரச உயர் வட்டாரங்கள் மூலம் தெரியவந்துள்ளது.**

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க விடுமுறையை களிப்பதற்காக கடந்த வியாழக்கிழமை நுவரெலியா பயணமானார். அங்கு ஜனாதிபதியின் ஓய்வு மாளிகையில் தங்கியுள்ள நிலையிலேயே இந்த சந்திப்பு நிகழவுள்ளது. இந்த சந்திப்புக்காக விரைவில் கொழும்பு வரும் ராம் மாதவ் இதற்காக ஹெலிகொப்டர் மூலமாக நுவரெலியாவுக்கு அழைத்துச் செல்வதற்கான ஏற்பாடுகள் இடம் பெற்று 15

## யாழ். அரச அதிபர் மகேசன் பணி இட மாற்றப்படுகிறார்?



யாழ்ப்பாணம், டிசெ. 27

யாழ். மாவட்ட அரசாங்க அதி பர் கணபதிப்பிள்ளை மகேசனுக்கு வரும் ஜனவரி மாதம் முதல் நடைமுறைக்கு வரும் வகையில் இடமாற்றம் வழங்கப்பட்டுள்ளது என்று மாவட்ட செயலக வட்டாரங்கள் தெரிவித்தன.

இடமாற்றப்படும் மகேசன் கொழும்பில் 15

## இடமாற்றம் தொடர்பில் எனக்கு அறிவிப்பில்லை!

### யாழ். அரச அதிபர் மகேசன்

யாழ்ப்பாணம், டிசெ. 27

பணி இடமாற்றம் வழங்கப்பட்டதாக எனக்கு எழுத்துமூலமாக எந்த அறிவிப்பு வழங்கப்பட வில்லை என்று யாழ். மாவட்ட அரச அதிபர் க. மகேசன் தெரிவித்துள்ளார். 15

## கோவிட் தொற்று நோய் இலங்கையை தாக்கலாம்!

### அரச மருத்துவர்கள் எச்சரிக்கை

கொழும்பு, டிசெ. 27

சீனா உள்ளிட்ட சில நாடுகளில் கோவிட் அச்சுறுத்தல் மீண்டும் அதிகரித்துள்ளமை இலங்கை உட்பட ஏனைய நாடுகளையும் தாக்கக்கூடும். எனவே, தொற்றா நோய்களால் பாதிக்கப்பட்டு ஆபத்தான நிலைமையில் உள்ளவர்கள் மிகுந்த அவதானத்துடன் செயல் பட வேண்டும்.

- இவ்வாறு அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் மத்திய குழு மற்றும் 15



ஆழிப்பேரலையில் பிள்ளைகளை பறிகொடுத்த தந்தை ஒருவரும் தாய் ஒருவரும் கதறி அழும் காட்சி...!
இடம் : உடுத்துறை சுனாமி நினைவாலயம்

## கடன் மறுசீரமைப்புக்கு சீனா, இந்தியா இணக்கம்!

கொழும்பு, டிசெ. 27

கடன் மறுசீரமைப்பை மேற்கொள்ள சீனாவும் இந்தியாவும் இணக்கம் தெரிவித்துள்ளன. எனினும், அதிகாரபூர்வமற்ற ரீதியாகவே இந்த இணக்கம் அளிக்கப்பட்டுள்ளதாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க 15

### ஆழிப்பேரலை 18ஆம் ஆண்டு:

## காவுகொள்ளப்பட்ட உறவுகளை கதறியழுது நினைவுகூர்ந்தனர்!

யாழ்ப்பாணம், டிசெ. 27

ஆழிப்பேரலையில் கொல்லப்பட்டவர்களின் 18ஆவது ஆண்டு நினைவேந்தல் நேற்று நாடு முழுவதும் அனுஷ்டிக்கப்பட்டது. தமது உறவுகளை நினைத்து கண்ணீர்விட்டு கதறியழுதும் அவர்களுக்கு பிடித்த உணவுவகைகளை படையிலிட்டும் பூக்களால் அர்ச்சித்தும் மாலைகள் சாத்தியும் தீபங்கள் ஏற்றியும் அஞ்சலித்தனர்.

2004 டிசெம்பர் 26ஆம் திகதி சுமாத்திரா தீவின் அருகே கடலில் 9.3 ரிக்டர் அளவில் ஏற்பட்ட 15

## கோட்டாபய குடும்பத்தினருடன் ஐரோப்பிய நாட்டுக்கே பறந்தார்!



கொழும்பு, டிசெ. 27

முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ அவரின் குடும்பத்தினருடன் நேற்று அதிகாலை டுபாய் சென்றார். அங்கிருந்து அவர் ஐரோப்பிய நாடு ஒன்றுக்கு செல்லவுள்ளார் என்று அறிய வருகிறது.

இதனிடையே, கோட்டாபய ராஜபக்ஷ குடும் பத்தினருடன் அமெரிக்கா சென்றார் என்று நேற்று செய்திகள் பரவின. ஆனால், 15

## இப்படியும் நடக்கிறது...!

உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தல்கள் நடைபெறுவது பெரும்பாலும் உறுதியாகி வருகின்றது. தேர்தலை நடத்துவதை எப்படியாவது காலம் தாழ்த்த அரச தரப்பு விரும்பினாலும் அது இனி சாத்தியமாகுமா என்பது தெரியவில்லை.

அதனால்தான் அநேகமாக எல்லா அரசியல் கட்சிகளும் தேர்தலுக்கான கடையை விரிக்கத் தொடங்கிவிட்டன.

பொதுஜன பெரமுனவின் முக்கிய தலைவர்கள் தேர்தலை எதிர்கொள்ளத் தாம் தயாராகவே இருக்கின்றனர் என்று கூறிக்கொண்டிருந்தாலும், சிலர் தேர்தல் நாட்டுக்கு மேலும் சுமையையே ஏற்படுத்தும் என்றும் அவ்வப்போது எச்சரிக்கை விடுக்கவும் தவறவில்லை.

தெற்கில் தேர்தலுக்கான ஆரவாரங்கள் தொடங்கிவிட்ட அதேவேளை வடக்கிலும் நமது தமிழ்த் தேசிய கட்சிகள் எவ்வாறு தேர்தலை சந்திப்பது என்பது குறித்து விக்னேஸ்வரனின் வீட்டில் கூடி ஆராய்ந்திருக்கின்றனர்.

அதுபற்றி வேறு ஒரு பத்தியில் பார்ப்போம்.

தெற்கில் பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி - தமக்கு வெற்றி வாய்ப்பு அதிகம் என்பதால் படுவேகமாகத் தேர்தல் பணிகளைத் தொடக்கிவிட்டது.

ஆனால், பொதுஜன பெரமுனவும் ஐக்கிய தேசியக் கட்சியும் ஒன்றாகத் தேர்தலை சந்திப்பது குறித்து பேசிவருகின்றன. சில இடங்களில் ஐக்கிய தேசியக்கட்சி தனித்துப் போட்டியிடக்கூடிய அளவுக்கு ஆதரவு இருப்பதாக நம்புகின்றது என்றும் செய்திகள் வருகின்றன.

ஏற்கனவே, தனிப்பட்ட சில நிறுவனங்கள் ஊடாக கருத்துக்கணிப்பை நடத்தியுள்ள பொதுஜன பெரமுன தேர்தலைச் சந்திக்க விரும்பவில்லை என்பதை முன்னரும் ஒரு தடவை இந்தப் பத்தியில் குறிப்பிட்டிருந்தேன்.

அண்மையில், இலங்கையுடன் மிக நெருக்கமாக இருந்துவரும் அயல்நாடு ஒன்றின் தூதரகத்தில் முக்கிய சந்திப்பு ஒன்றை நடத்தியிருந்தார், பொதுஜன பெரமுனவின் மூளை என்று செல்லப்படும் பஸில் ராஜபக்ஷ.

நாட்டின் அரசியலில் எப்போதும் கவனம் செலுத்தி வரும் சில முக்கிய தூதரகங்களும் தனியார் நிறுவனங்கள் ஊடாக அவ்வப்போது மக்கள் மத்தியில் கருத்துக் கணிப்புக்களை நடத்துவதுண்டு.

அவ்வாறு தாம் நடத்திய கருத்துக்கணிப்பு ஒன்றின் முடிவுகள் முழுமையாக கிடைக்காதபோதிலும் அதன் சாராம்சத்தை பெற்றுவைத்திருந்த குறித்த தூதரகம், தம்மைச் சந்தித்த பஸில் ராஜபக்ஷவுக்கு எச்சரிக்கை சமிக்ஞை விடுத்திருக்கின்றதாம்.

தேர்தல் நடந்தால் பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி மிகச் சுலபமாக வெற்றி பெறும் என்றும் பொதுஜன பெரமுனவின் நிலை மிகப் பரிதாபமாக இருக்கும் எனவும் எச்சரித்துள்ளதுடன் முடிந்தளவு கட்சிகளை சேர்த்துக்கொண்டு பெரிய கூட்டணி ஒன்றுக்கு முயற்சிக்குமாறும் ஆலோசனை வழங்கியிருக்கின்றதாம்.

ஏற்கனவே தான் நடத்திய கருத்துக்கணிப்பில் தேர்தலை சந்திக்க தயக்கம் காட்டிய பஸில் ராஜபக்ஷ, தற்போது தூதரகத்தின் ஆலோசனையை கேட்ட பின்னர் மேலும் அதிர்ச்சியில் உறைந்திருக்கின்றார் என்கின்றன அவருக்கு நெருக்கமான வட்டாரங்கள்.

தேர்தலை ஏதேனும் ஒருவகையில் ஒத்திவைக்க முயற்சி செய்தால் அதற்கு எதிராக அனைத்து எதிரணியினரும் ஒன்றிணைந்து வீதிக்கு இறங்கினால், அதனை எதிர்கொள்ள முடியாத சூழ்நிலை ஏற்பட்டு, தேர்தல் நடத்த வேண்டிய நிலை வந்தால், அது எதிரணியினருக்கு மேலும் வாய்ப்பை ஏற்படுத்தி விடும் என்று பெரமுனவின் முக்கிய தலைவர்கள் சிலர் ஆலோசனை தெரிவித்துள்ளனர்.

இதனால், தேர்தலை எப்படி சந்திப்பது என்பதிலேயே இப்போது அவர்களின் கவனம் திரும்பியிருக்கின்றன என்கிறது அவர்களுக்கு நெருக்கமான வட்டாரங்கள்.

இந்தக் தகவல்களை என்னுடன் பகிர்ந்துகொண்ட தெற்கு ஊடகர் ஒருவர் கடைசியில் சொன்ன சில விடயங்கள் கவனத்தைப் பெற்றன. அண்மைக் காலமாக நாடு மிகப்பெரிய உணவுப்பற்றாக்குறையை எதிர்கொள்ளவிருக்கின்றது என்று ஜனாதிபதி அடிக்கடி கூறிக்கொண்டிருக்கின்றார். பெப்ரவரியில் பத்து மணிநேர மின்வெட்டு வரலாம் என்றும் திரும்பத்திரும்ப எச்சரிக்கை விடுக்கின்றனர்.

இந்த எச்சரிக்கைகளை பார்க்கின்றபோது இவை எல்லாம் நடந்துவிட்டால் தேர்தல் ஒன்றை நடத்த கோரிக்கை விடுக்கின்றவர்களே அடங்கிப் போய்விடுவார்களோ தெரியவில்லை.!

அந்த ஊடக நண்பரின் இந்த எச்சரிக்கையும் ஏதோ ஒரு செய்தியையே சொல்லிச் சென்றது.!

- ஊர்க்குருவி

# நவாலி சென். பீற்றர் தேவாலயத்தில் சிறப்புற நடைபெற்றது ஒளிவிழா









யாழ்ப்பாணம், டிசெ. 27

வடக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களம், சண்டிலிப்பாய் பிரதேச செயலகத்துடன் இணைந்து நடத்திய ஒளிவிழா - 2022 நேற்று மாலை நவாலி சென். பீற்றர்ஸ் தேவாலய மண்டபத்தில் நடைபெற்றது.

வடக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களப் பிரதிப் பணிப்பாளர் திருமதி ராஜமல்லிகை சிவசுந்தரசர்மா தலைமையில் மிகவும் சிறப்பாக இந்த நிகழ்வு நடைபெற்றது.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக வடக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் இ. வரதீஸ்வரன் கலந்து கொண்டார்.

(ஐ)

# மார்கழி இசைவிழா: நாளைய நிகழ்வுகள்

யாழ்ப்பாணம், டிசெ. 27

யாழ். இந்திய துணைத் தூதரகம், நல்லூர் சைவத் தமிழ் பண்பாட்டு கலைக்கூடல், யாழ். வணிகர் கழகம் இணைந்து நடத்தும் மார்கழி இசைவிழா 2022இன் இரண்டாம் நாள் நிகழ்வுகள் நாளை புதன்கிழமை யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்தில் நடைபெறவுள்ளது.

டான் தொலைக்காட்சி குழுமத்தின் ஊடக அனுசரணையில் கைலாசபதி கலையரங்கில் நடைபெறும் இந்த நிகழ்வின் இரண்டாம் நாளான நாளை புதன்கிழமை மாலை 4. 45 மணிக்கு மகிழ்வொளி ஏற்றலுடன் நிகழ்வு ஆரம்பமாகும்.

தொடர்ந்து தமிழ்த் தாய் வாழ்த்தை இந்தியா கோர்ணர் இசைப்பிரிவு மாணவர்கள் இசைப்பர், வரவேற்பு நடனத்தை ஜெயானந்த ஜீவ நர்த்தனாலய மாணவர்கள் வழங்குவர். மங்கல இசையில் விரலிசை கானத்தை திருமதி கவிதா வாமதேவன் வழங்குவார்.

பஞ்சபுராண ஆடல் நாட்டியாஞ்சலி நிகழ்வை யாழ். பல்கலைக்கழக சேர். பொன்னம்பலம் இராமநாதன் அரங்காற்று மற்றும் கட்புல கலைகள் பீட நடனத்துறை மாணவர்கள் வழங்குவர். தொடர்ந்து, பூதத் தம்பி நாட்டுக்கூத்து யாழ்ப்பாண பிரதேச கலாசார பேரவை கலைஞர்கள் வழங்குவர்.

(ஐ)

# சீரற்ற காலநிலையால் 4 மாவட்டங்களில் பாதிப்பு!

கொழும்பு, டிசெ. 27

நாட்டில் கடந்த இரு தினங்களாக நிலவும் சீரற்ற காலநிலை காரணமாக 4 மாவட்டங்களை சேர்ந்த 1,600 க்கும் அதிக மக்கள் பாதிக்கப்பட்டுள்ளதோடு, நூற்றுக்கும் மேற்பட்ட வீடுகள் சேதமடைந்துள்ளன என்று அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் தெரிவித்துள்ளது.

அதற்கமைய மாத்தளை, கண்டி, அம்பாறை மற்றும் பதுளை ஆகிய மாவட்டங்களில் 387 குடும்பங்களைச் சேர்ந்த 1,675 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். ஒரு வீடு முற்றாகவும் 109 வீடுகள் பகுதியளவிலும் சேதமடைந்துள்ளன.

மாத்தளையில் மண்சரிவு மற்றும் மரம் முறிந்து விழுந்தமை காரணமாக 53 குடும்பங்களைச் சேர்ந்த 263 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். இந்த மாவட்டத்தில் வீடொன்று பகுதியளவில் சேதமடைந்துள்ளது.

கண்டி மாவட்டத்திலேயே அதிக பாதிப்புக்கள் பதிவாகியுள்ளன. இந்த மாவட்டத்தில் கடும் மழை மற்றும் மரம் முறிந்து விழுந்தமை காரணமாக 322 குடும்பங்களைச் சேர்ந்த 1,367 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.



இங்கு இரு மரணங்கள் பதிவாகியுள்ளன. மூவர் காயமடைந்துள்ளனர். அத்தோடு ஒரு வீடு முழுமையாகவும் , 35 வீடுகள் பகுதியளவிலும் சேதமடைந்துள்ளன.

அம்பாறை மாவட்டத்தில் 4 குடும்பங்களைச் சேர்ந்த 11 பேர் கடும் காற்று மற்றும் மழையால் பாதிக்கப்பட்டுள்ளனர். இதேவேளை பதுளையில் கடும் காற்று மற்றும் மரம் முறிந்து விழுந்தமை காரணமாக 8 குடும்பங்களை சேர்ந்த 34 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

நாட்டின் மேற்கு திசையில் நிலைகொண்டுள்ள தாழமுக்கம் படிப்படியாக இலங்கையின் கடற்பகுதியை கடந்து செல்வ தால் , கடந்த இரு தினங்களாக நிலவிய சீரற்ற காலநிலை மாற் றமடையும் என வளிமண்டல வியல் திணைக்களம் அறிவித்துள்ளது.

அதற்கமைய வடக்கு, வட மத்திய மற்றும் கிழக்கு மாகாணங்களில் மாத்திரம் மழையுடனான காலநிலை நிலவும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும் மேல், சப்ரகமுவ மற்றும் வடமத்திய மாகாணங் களில் சில பிரதேசங்களில் மாத்திரம் மாலை அல்லது இரவில் மழை அல்லது இடியுடன் கூடிய மழை பெய்யும் என எதிர்வு கூறப்பட்டுள்ளது.

இடியுடன் கூடிய மழை பெய்கின்ற சந்தர்ப்பங்களில் அவதானத்துடன் செயற்படுமாறு வளிமண்டலவியல் திணைக்களம் பொது மக்களை அறிவுறுத்தியுள்ளது. (ஐ)

ஈழநாடு
Eelanadu
27.12.2022 செவ்வாய்க்கிழமை
பிலவ வருடம், மார்கழி 12

**"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"**
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
**தொலைபேசி : 021 205 2300**

# கட்சிகள் ஒன்றாக பயணித்தல்?

ஆறு தமிழ்த் தேசியக் கட்சிகள் எதிர்காலத்தில் இணைந்து செயல்படுவது தொடர்பில் உரையாடப்பட்டிருக்கின்றன. உள்ளூராட்சி தேர்தலில் தொழில்நுட்பரீதியாக தனித்துப் போட்டியிடுவதை ஆராய்ந்து வருவதாக அண்மையில் தமிழரசு கட்சி அறிவித்திருந்தது. இது தொடர்பில் பங்காளிக் கட்சிகள் பொது வெளிகளில் விமர்சனங்களை முன்வைத்திருந்தன. இந்த நிலையில்தான், ஆறு தமிழ் கட்சிகள் கூடி ஆராய்ந்திருக்கின்றன. தமிழ்த் தேசிய கட்சிகள் முடிந்தவரையில் ஒன்றுபட்டு பயணிக்க வேண்டுமென்பதை 'ஈழநாடு' தொடர்ச்சியாக வலியுறுத்தி வந்திருக்கின்றது. ஒவ்வொரு கட்சிகளுக்கும் தேர்தல் நலனுண்டு. அந்த நலன்களை பாதிக்கப்படாத வகையில்தான் அவைகளால் முடிவுகளை மேற்கொள்ள முடியும்.

கட்சிகளைப் பொறுத்தவரையில் தேர்தல் அரசியல் எப்போதுமே தவிர்க்க முடியாதவையாகும். கட்சிகள் அவ்வாறு சிந்திப்பதற்கு வலுவான காரணமும் உண்டு. ஏனெனில், ஒரு கட்சி தேர்தல்களில் தோல்வியடையும்போது, அந்தக் கட்சி வெறுமனே தேர்தலில் மட்டும் தோல்வியடையவில்லை. மாறாக, அதுவரையில் குறித்த கட்சிக்கு இருந்த சமூக மற்றும் அரசியல் தகுதியையும் இழந்துவிடுகின்றது. உதாரணமாக அரசாங்கத்துடன் பேசுவதாயின் அல்லது இராஜதந்திர தரப்புக்களுடனான சந்திப்பின் போதும் பாராளுமன்ற ஆசனங்களை பாதுகாத்திருக்கும் கட்சிகள் மட்டுமே பங்குகொள்ள முடிகின்றது. ஏனையவர்கள் என்னதான் பெறுமதியான நிலைப்பாடுகளை முன்வைத்தாலும் கூட, அதற்கு உத்தியோகபூர்வ அங்கீகாரம் இருக்கப்போவதில்லை. ஒரு கட்சியின் அரசியல் தகுதி அதனிடமுள்ள பாராளுமன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கையால்தான் தீர்மானிக்கப்படுகின்றது. இந்த யதார்த்தத்தை ஏற்றுக்கொண்டுதான் கட்சிகள் ஒன்றாகப் பயணிப்பதை நாம் நோக்க வேண்டும்.

இந்தப் பின்புலத்தில் நோக்கினால், கடந்த காலத்திலும் இவ்வாறான சந்திப்புகள் இடம்பெற்றிருக்கின்றன. ஆனால், அவைகள் எதிர்பார்த்த விளைவுகளை தரவில்லை. ஆனால், தற்போது நிலைமை முற்றிலும் மாறுபட்டது. அதாவது, ரணில் விக்கிரமசிங்க தேசிய இனப்பிரச்னையை தீர்க்கப் போவதாகக் கூறிவரும் நிலையில் தமிழ் கட்சிகள் முன்னைய முரண்பாடுகளை புறம்தள்ளி ஓரணியாக செயல்படுவது மிகவும் அவசியமாகும். இது தனியாக பயணிப்பதற்கான தருணமல்ல. அதேவேளை, முடிந்தவரையில் பொது வேலைத்திட்டம் ஒன்றை வகுத்து அதற்கேற்ப செயல்பாடுகளை முன்னெடுக்க வேண்டும். தேர்தலொன்று வருகின்ற போது தமிழரசு கட்சி பெரிய கட்சியென்னும் யதார்த்தத்தையும் புறம்தள்ளக்கூடாது. இன்றைய நிலையில் தமிழரசு கட்சி ஒன்றுதான் வடக்கு - கிழக்கில் வாக்குவங்கியை பேணிவரும் ஒரேயொரு கட்சியாகும். ரெலோவை தவிர, ஏனைய கட்சிகள் அனைத்துமே பெரும்பாலும் யாழ்ப்பாணக் குடாநாட்டு கட்சிகளாகவே இருக்கின்றன. இந்த நிலையில் கட்சிகள் ஒன்றாக செயற்படும் விடயத்தில் தேர்தலை முதன்மைப்படுத்தக்கூடாது. அதற்கப்பால் தமிழ் மக்களின் நலன்களை மட்டுமே முதன்மைப்படுத்த வேண்டும்.

இன்று ஒன்றுபட்டு செயல்படுவது தொடர்பில் அவ்வப்போதுகூடி ஆராய்ந்து வரும் அனைத்து கட்சிகளுமே அடிப்படையில் தமிழ் தேசியக் கூட்டமைப்பின் அங்கமாக இருந்த கட்சிகள்தான். தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்குள் பிளவுகள் ஏற்பட்டமைக்கு பிரதான காரணமாக கொள்கையை முன்வைத்து வாதிட முடியாது. ஏனெனில், அனைத்து கட்சிகளுமே ஒரே விடயங்களையே வலியுறுத்திவருகின்றன.

தேசிய இனப்பிரச்னை தொடர்பில் ஆட்சியாளர்களை ஓரணியாக எதிர்கொள்வதே அடிப்படையானது. பேச்சில் கொழும்பு எந்தளவு உண்மையாக இருக்கின்றது அல்லது இல்லையென்பது விடயமல்ல. மாறாக, கொழும்பை தந்திரோபாயமாக எதிர்கொள்வதற்கும் விடயங்களை படிப்படியாக கையாளுவதற்கும் தமிழ்த் தேசியக் கட்சிகள் கருத்தொருமித்து ஓரணியாக பயணிப்பது மட்டும்தான். தமிழ் கட்சிகளால் இன்றைய சூழலில் முன்னெடுக்கக்கூடிய ஒரேயோர் அரசியல் வியூகமாகும். அதேவேளை, நாம் தொடர்ந்தும் வலியுறுத்திவருவது போன்று இன்றைய சூழலில் கையாளக் கூடியதை கையாளும் அதேவேளை உச்சபட்சமானதோர் அரசியல் தீர்வை காண்பதற்கான பொறிமுறை தொடர்பிலும் தமிழ் கட்சிகள் கருத்தொருமித்து பயணிக்க வேண்டும். வெறுமனே ஓரணியாக செயல்படுவது மட்டுமல்ல முக்கியமானது. எதனை நோக்கிச் செயல்படுகின்றோம் என்பது அதனைவிடவும் முக்கியமானது.

# கொழும்பில் 9,300 குழந்தைகள் போசாக்கு குறைபாட்டால் அவதி

கொழும்பு, டிசெ. 27

கொழும்பு மாவட்டத்தில் ஐந்து வயதுக்குட்பட்ட சுமார் 9,300 சிறுவர்கள் போசாக்கு குறைபாட்டால் பாதிக்கப்பட்டுள்ளதாக தெரியவந்துள்ளது.

கொழும்பு பிரதேச செயலகர் பிரிவிலேயே அதிகளவான சிறுவர்கள் போசாக்கு குறைபாடு உள்ளவர்களாக உள்ளனர். அந்த எண்ணிக்கை 1949.

கொழும்பு மாவட்ட செயலகத்தில் அண்மையில் நடைபெற்ற மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் இந்தத் தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இம்மாவட்டத்தில் 1457 கர்ப்பிணித் தாய்மார்கள் போசாக்கு குறைபாட்டால் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

உணவுப் பற்றாக்குறையால் கடுமையான ஊட்டச்சத்து குறைபாடு படிப்படியாக உருவாகும் என்றும், சுமார் இரண்டு ஆண்டுகளுக்குப் பிறகு இது குழந்தைகளில் வளர்ச்சி குறைபாட்டை ஏற்படுத்தும் என்றும் சுகாதாரத்துறை கூறுகின்றது.

போசாக்கு நிலையை குறைப்பதற்காக இனங்காணப்பட்ட குடும்பங்களுக்கு போஷாக்கு பைகளை வழங்குதல் உள்ளிட்ட பல வேலைத்திட்டங்கள் நடை முறைப்படுத்தப்பட்டு வருவதாக கொழும்பு மாவட்ட செயலகம் தெரிவித்துள்ளது. (அ)

# முட்டை விலை குறைவடைந்தால் பாணின் விலையை குறைக்கலாம்

கொழும்பு, டிசெ. 27

முட்டை விலை குறைவடைந்தால், பாண் உள்ளிட்ட ஏனைய வெதுப்பக உற்பத்திகளின் விலையைக் குறைக்க முடியும் என அகில இலங்கை வெதுப்பக உரிமையாளர் சங்கம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பில், கருத்துரைத்த அகில இலங்கை வெதுப்பக உரிமையாளர் சங்கத்தின் தலைவர் என்.கே ஜயவர்தன, தற்போது முட்டையொன்று 60 ரூபா வரை விற்பனை செய்யப்படுவதாக தெரிவித்தார்.

ஒரு இலட்சத்துக்கும் மேற்பட்ட முட்டைகள் வெதுப்பகத்துறைக்கு பயன்படுத்தப்படுகின்றன. எனினும், தற்போது முட்டை விலை அதிகரிப்பினால் வெதுப்பக உற்பத்திகள் பாதிக்கப்பட்டுள்ளன.

இதனால் வெதுப்பக உற்பத்திகளின் விலைகளும் உயர்ந்துள்ளன.

எனவே முட்டை விலையைக் குறைப்பதற்கு நடவடிக்கை எடுத்தால், வெதுப்பக உற்பத்திகளையும் குறைக்க முடியும் என அவர் கூறினார். (அ)

# 7 கோடி ரூபா அரிசி மோசடி: சதொச முகாமையாளர் கைது!

கொழும்பு, டிசெ. 27

அநுராதபுரம் சதொச நிறுவனத்தில் சுமார் 6 கோடியே 97 இலட்சம் ரூபா பெறுமதியான நாடு மற்றும் சம்பா அரிசியை மோசடி செய்ததாக கூறப்படும் வழக்கு தொடர்பில் நீண்ட விசாரணையின் பின்னர் சந்தேகத்தின் பேரில் இரகசியப் பொலிஸாரால் கைது செய்யப்பட்ட அநுராதபுரம் சதொச களஞ்சிய முகாமையாளர் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

களஞ்சியசாலை, அநுராதபுரம் பிரதான நீதிவான் மற்றும் மேலதிக மாவட்ட நீதிபதி நாலக ஜயசூரிய, சந்தேக நபரை ஜனவரி மாதம் 5ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்க உத்தரவிட்டார்.

சந்தேக நபர் வெளிநாடு செல்வதைத் தடுக்கும் வகையில் கட்டுநாயக்க மற்றும் மத்தள சர்வதேச விமான நிலையங்களின் குடிவரவு, குடியகல்வு அதிகாரிகளுக்கு நீதிவான் உத்தரவிட்டார்.(அ)

# கடுவலையில் கடத்தப்பட்டவர் சூட்டுக் காயங்களுடன் மீட்பு!

கொழும்பு, டிசெ. 27


கடுவலை, வெலிப்பில்லவில் கடத்தப்பட்டு, பின்னர் வெட்டப்பட்டும் சுடப்பட்டும் பலத்த காயமடைந்த நிலையில் கைவிடப்பட்டுச் செல்லப்பட்ட ஒருவர் மீட்கப்பட்டு நேற்று அதிகாலை வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டார்.

பூ பறிக்க வந்த நபர் ஒருவர், இரத்த வெள்ளத்தில் ஒருவர் கிடப்பதைக் கண்டு அவரின் அருகில் சென்று பார்த்து அவருடன் பேசிய போது, தான் கடவத்தை பகுதியைச் சேர்ந்தவர் எனவும் ஒரு குழுவினரால் தான் கடத்தப்பட்டு கூரிய ஆயுதங்களால் வெட்டப்பட்டு பின்னர் தன்னைச் சுட்டதாகவும் கூறியுள்ளார்.

இதனையடுத்து பூ பறிக்க வந்த நபர் 1990 அம்பியூலன்ஸுக்கு தகவல் வழங்கி வைத்தியசாலையில் சேர்க்க நடவடிக்கை எடுத்திருந்தார்.

இதனையடுத்து குறித்த நபர் தற்போது கொழும்பு தேசிய வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருவதாக கடுவல பொலிஸார் தெரிவித்தனர். (அ)

## அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'



டிசெம்பர் - 27 செவ்வாய்க்கிழமை
சுபகிருது வருடம் - மார்கழி 12
நல்ல நேரம் : 07.30 - 09.00
ராகு காலம் : 03.00 - 04.30
திதி : பஞ்சமி




**மேடம்**
எதிர்காலம் பற்றிய சிந்தனை மேலோங்கும். ஆதாயம் அதிகரிக்கும். வியாபாரத்திற்காக மேற்கொள்ளும் முயற்சி வெற்றியாகும். அடுத்தவர் நலனில் அக்கறை செலுத்துவீர்கள்.

**இடபம்**
பண வரவு அதிகரிக்கும். கடன்களை அடைப்பீர்கள். பொன் பொருள் சேர்க்கை உண்டாகும். புதிய குடும்பத்தில் மகிழ்ச்சி அதிகரிக்கும். எதிர்பாராத வருமானம் வந்து சேரும்.

**மிதுனம்**
அலைச்சல் கூடும். முயற்சிகளில் கவனம் தேவை. அரசு வழியில் சில சங்கடங்கள் தோன்றும். மனதில் தேவையற்ற சிந்தனைகள் உண்டாகும். வருமானத்தில் தடை உண்டாகும்.

**கடகம்**
பொருளாதார நெருக்கடி விலகும். குடும்பத்தில் மகிழ்ச்சி அதிகரிக்கும். பெரியோரின் ஆலோசனைக் கேட்டு செயல்படுவதால் முயற்சியில் நன்மை உண்டாகும்.

**சிம்மம்**
உடல்நிலை சீராகும். எதிர்பார்த்த பண வரவு உண்டு. பகைவர்களின் தொல்லை நீங்கும். வாழ்க்கைத் தேவைகளை பூர்த்தி செய்து கொள்வீர்கள். எண்ணம் நிறைவேறும்.

**கன்னி**
முயற்சியில் வெற்றி காண்பீர்கள். எதிர்பார்த்தவை அனுகூலமாகும். பணியாளர் ஒத்துழைப்பார்கள். குடும்ப பிரச்னைக்கு தீர்வு காண்பீர்கள். பெரியோர் ஆதரவு நன்மை தரும்.

**துலாம்**
நிதானமுடன் செயல்பட வேண்டிய நாள். முயற்சிகள் தள்ளிப்போகும். கோபத்திற்கு இடமளிக்க வேண்டாம். பணியிடத்தில் கவனம் தேவைப்படும். அன்பளிப்புகள் பெறுவதைத் தவிர்க்கவும்.

**விருட்சிகம்**
எதிர்பார்த்த செய்தி வந்து சேரும். பயணத்தால் நன்மை உண்டு.கொடுத்த வாக்கை நிறைவேற்றுவீர்கள். பணப்புழக்கம் அதிகரிக்கும்.எதிர்பார்த்த வருமானம் வரும். முயற்சி நிறைவேறும்.

**தனுசு**
அவசரப்படுவதை தவிர்க்கவும்.வருமானத்தில் ஏற்பட்ட தடைகள் அகலும். உங்கள் முயற்சி எளிதாக நிறைவேறும்.கணவன் மனைவிக்குள் இருந்த பிரச்னைகள் விலகும்.

**மகரம்**
மனதில் குழப்பம் அதிகரிக்கும். உங்கள் அணுகுமுறையால் நன்மைகளை அடைவீர்கள். வருமானம் அதிகரிக்கும்.நீண்ட நாட்களாக வராமல் இருந்த பணம் இன்று வந்து சேரும்.

**கும்பம்**
எச்சரிக்கை அவசியம்.குடும்பத்தில் சுப நிகழ்ச்சிகள் நடைபெறக் கூடிய அறிகுறிகள் தோன்றும். செலவுகள் அதிகரிக்கும்.தொழிலில் எதிர்பார்த்த நன்மைகள் தள்ளிப்போகும்.

**மீனம்**
எதிர்பார்த்த வரவு இன்று வந்து சேரும். உங்கள் முயற்சிகள் எளிதாக நிறைவேறும்.அடிப்படைத் தேவைகளை பூர்த்தி செய்து கொள்வீர்கள். பொன் பொருள் சேர்க்கை உண்டாகும். உத்தியோகத்தில் நீங்கள் எதிர்பார்த்த செய்தி வரும்.

# ஆழிப்பேரலை 18ஆம் ஆண்டு; தமிழகம் முழுவதும் அஞ்சலி!

இராமேஸ்வரம், டிசெ. 27

ஆழிப்பேரலை தாக்கத்தின் 18ஆம் ஆண்டு நினைவுநாளான நேற்று உறவுகளை பறிகொடுத்தவர்கள் கடற்கரைகளில் கண்ணீர் மல்க அஞ்சலி செலுத்தினர்.



கடந்த 2004 டிசெம்பர் 26 ஆம் திகதி ஆழிப்பேரலை தாக்கத்தால் தமிழக கடலோரப் பகுதிகளில் ஆயிரக்கணக்கானோர் உயிரிழந்தனர். இந்த துக்கநாளில் தமிழகத்தில் பல்வேறு பகுதிகளில் நினைவு அஞ்சலி செலுத்தப்பட்டது.

பேரலை கோரத்தாண்டவத்தின் 18ஆம் ஆண்டு நினைவு நாளான நேற்று வேதாரண்யத்தை அடுத்த ஆறுகாட்டுத்துறையில் சுனாமியில் பலியானவர்களுக்கு கடலில் பால் ஊற்றியும் மலர் தூவியும் உறவினர்கள் கண்ணீர் அஞ்சலி செலுத்தினர்.

கன்னியாகுமரி மாவட்டம், மணக்குடி கடற்கரை பகுதியில் உயிரிழந்த 138 பேருக்கு அஞ்சலி செலுத்தும் வகையில் கிறிஸ்துவ தேவாலயத்தில் திருப்பலி நடைபெற்றது. பின்னர் 138 பேரும் ஒரே இடத்தில் அடக்கம் செய்யப்பட்ட கல்லறை தோட்டத்தில் கண்ணீர் மல்க மெழுகுவர்த்தி ஏந்தி அஞ்சலி செலுத்தினர்.

நாகை மாவட்டம் கீச்சாங்குப்பம், அக்கரைப்பேட்டை, வேளாங்கண்ணி, நாகை ஆரிய நாட்டு தெரு, செருதூர், நாகூர், நம்பியார்நகரில் சுனாமியின் உயிர் நீத்தவர்களின் படங்களுக்கு அவர்களது உறவினர்கள் மலர் தூவி கண்ணீர் அஞ்சலி செலுத்தினர். இதைப்போல் அக்கரைப்பேட்டை மீனவர்கள் நூற்றுகணக்கானோர் மௌன ஊர்வலம் சென்று சுனாமி நினைவிடத்தில் அஞ்சலி செலுத்தினர். (ஐ)

# திராவிட இயக்க கொள்கையில் முதன்மையானது சமூகநீதிதான்!

## முதலமைச்சர் மு. க. ஸ்டாலின்

சென்னை, டிசெ. 27

திராவிட இயக்கத்தின் அடிப்படை கொள்கைகளில் முதன்மையானது சமூகநீதிதான் என முதலமைச்சர் மு. க. ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

தமிழ்நாடு காங்கிரஸ் துணைத் தலைவரும், ஊடகத்துறை தலைவருமான ஆ. கோபண்ணா எழுதிய 'மாமனிதர் நேரு' - அரிய புகைப்பட வரலாறு' என்ற நூல் வெளியீட்டில் பங்கேற்று உரையாற்றியபோதே முதல்வர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மேலும், கூட்டணியில் இருந்தாலும் இல்லாவிட்டாலும் என்னோடும் தி. மு. கவினரோடும் கொள்கையை கடந்த நட்பு கொண்டவர். தேசிய இயக்கத்தில் இருந்தாலும் திராவிட இயக்கத்தின் சமூக நீதி கொள்கை மீது ஆர்வம் கொண்டவர். இதை படிப்பதை விட பார்த்தாலே போதும் என்னும் ஆர்வத்தை இந்த புத்தக தலைப்பு தூண்டி உள்ளது.

2006 முதல் 2016 வரை நேரு பற்றிய தகவல்கள் இடம் பெற்றுள்ளன என கூறினார்.

முன்னாள் பிரதமர் நேரு இந்திய ஒன்றியத்துக்கு ஆற்றியவைகளுக்கு நன்றியாக அனைவரும் இதை படிக்க வேண்டும். இந்தியா தன் அடையாளமாக கொள்ள வேண்டியது நேருவைதான். நேரு பளிங்கு போல தூய்மையானவர் என்று காந்தியடிகள் சொன்னதாக இந்த புத்தகத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

அத்துடன், ஒரே மொழி, நாடு என்பதை எதிர்த்தவர். வகுப்புவாதமும் , தேசியவாதமும் சேர முடியாது என்று சொன்னவர். இந்திய அரசமைப்பு சட்டத்தின் முதல் திருத்தமாக சமூகத்தில் பின் தங்கியவர்களுக்கு செய்வதை அரசு தடுக்காது என்று தமிழகத்தின் மீது ஹிந்தி திணிப்பு தொடர்ந்து நடந்து வருகிறது. ஹிந்தி திணிக்கப்படக்கூடாது என்று சொன்னார் நேரு. பாராளுமன்ற ஜனநாயகத்தின் அடையாளமாக இருந்தவர் நேரு - என்றார். (ஐ)

# போதைப் பொருளால் குற்றங்கள் தமிழ்நாடு முழுவதும் அதிகரிப்பு!

## எதிர்க்கட்சி தலைவர் குற்றச்சாட்டு

சென்னை, டிசெ. 27

போதைப் பொருள் விற்பனையால் தமிழகத்தில் குற்றச்சம்பவங்கள் அதிகரித்து வருவதாக எதிர்க்கட்சி தலைவர் எடப்பாடி பழனிசாமி குற்றம் சாட்டியுள்ளார்.



இது குறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், போதைப் பொருள் விற்பனையால் தமிழகத்தில் அதிகரித்து வரும் குற்றச் சம்பவங்கள் மற்றும் தொடரும் காவல் நிலைய மரணங்கள் ! "தூங்குபவர்களை எழுப்பலாம் - தூங்குவது போல் நடிப்பவர்களை தலைகீழாக நின்று போராடினாலும் எழுப்ப முடியாது."

கஞ்சா விற்பனை முழுமையாக தடுத்து நிறுத்தப்படும் என்றும், அதற்காக ஆப்பரேஷன் கஞ்சா 2.0 ஒன்றை ஆரம்பித்த தமிழ்நாடு காவல் துறையின் நடவடிக்கை கஞ்சா 2.0 மூலம் கஞ்சா கடத்தலையும் மற்றும் விற்பனையையும் எவ்வளவு தடுத்தது என்றும், எத்தனை வழக்குகள் பதிவு செய்யப்பட்டன என்றும், எத்தனை குற்றவாளிகள் பிடிபட்டனர் என்றும், எவ்வளவு பேருக்கு தண்டனை பெற்றுத் தரப்பட்டது என்பதையும் இந்த அரசு விளக்க வேண்டும்.

மேலும், நடவடிக்கை கஞ்சா 2.0 வெற்றி எனில், ஏன் தற்போது நடவடிக்கை கஞ்சா 3.0 நடவடிக்கையினை காவல் துறை தொடங்கியுள்ளது என்றும், காவல்துறையை தன்வசம் வைத்திருக்கும் இந்த விடியா அரசின் முதலமைச்சர் விளக்க வேண்டும்.

தமிழ்நாடு முழுவதும் கஞ்சாவை வயது வித்தியாசம் இல்லாமல் 18 வயதுக் குட்பட்ட சிறுவர்கள், பள்ளி மற்றும் கல்லூரி மாணவர்கள் முதல் முதியவர்கள் வரை

பயன்படுத்தி வருகின்றனர். இவர்களால் குற்றச்செயல்கள் அதிகரித்துள்ளன. தமிழ்நாட்டில் போதைப் பொருட்களை கட்டுப்படுத்த அரசு உண்மையான அக்கறையுடன் நடவடிக்கை எடுக்க வேண்டும் - என்றார். (ஐ)

# கூட்டணி உறுப்பினர்களின் இணக்கத்தின்படியே முடிவு

## அனந்தியின் குற்றச்சாட்டுக்கு விக்கி பதில்

**யாழ்ப்பாணம், டிசெ.27**

**கூட்டணியில் உள்ள பெரும்பான்மையான உறுப்பினர்களின் இணக்கத்தின் அடிப்படையிலேயே எந்தவொரு தீர்மானமும் எடுக்கப்படும் என தமிழ் மக்கள் தேசியக் கூட்டணியின் தலைவர் சி.வி.விக்னேஸ்வரன் தெரிவித்துள்ளார்.**

தமிழ் மக்கள் தேசியக் கூட்டணியின் தலைவர் சி.வி விக்னேஸ்வரன் தன்னிச்சையான தீர்மானங்களை எடுப்பதாக ஈழத்தமிழர் சுயாட்சி கழகப் பொதுச் செயலாளரும் வட மாகாண சபையின் முன்னாள் உறுப்பினருமான அனந்தி சசிதரன் குற்றஞ்சாட்டியிருந்தார்.

இது தொடர்பில் கருத்து தெரிவித்த பாராளுமன்ற உறுப்பினர் சி.வி.விக்னேஸ்வரன், கூட்டணியின் அனைத்து உறுப்பினர்களுடனும் கலந்துரையாடியதன் பின்னரே எந்தவொரு தீர்மானமும் இறுதி செய்யப்படும் என குறிப்பிட்டார்.

அந்த தீர்மானங்கள் கூட்ட ணியின் அனைத்து உறுப்பினர் களுக்கும் மின்னஞ்சல் மூலம் அனுப்பி வைக்கப்படும்.

அதற்கு ஏதேனும் ஆட்சேபனை தெரிவிக்கப் பட்டால், அந்த விடயம் குறித்து மறுபரீசிலனையும் செய்யப்படும் நடைமுறை பின்பற்றப்பட்டு வருகின்றது.

நீண்ட நாட்களாக கூட்டணியின் கலந்துரையாடல்களில் அனந்தி சசிதரன் பங்கேற்பதில்லை.

இதேவேளை, தமிழ் மக்க



ளின் தீர்க்கப்படாதுள்ள பல பிரச்சினைகளுக்கு தீர்வை பெற்றுக்கொடுக்கும் விடயத்தில் தமிழ் தேசிய கட்சிகளிடம் ஒருமித்த கொள்கை நிலவுவதால் இணைந்து பயணிப்பது சாத்தியமான விடயம் என அவர் குறிப்பிட்டார். (அ)

# பொலிஸ் அதிகாரிகளை தாக்கிய மூவர் கைது!

கொழும்பு, டிசெ. 27

பொலிஸ் அதிகாரிகளின் கடமைக்கு இடையூறு விளைவித்த மூன்று சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

நேற்று முன் தினம் இரவு, வத்தளை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட ஹெந்தல சந்திப் பகுதியில் எலகந்த வீதியிலிருந்து கொழும்பு - நீர் கொழும்பு பிரதான வீதியின் நுழைவாயிற்கு கூச்சலிட்ட வண்ணம் ஓட்டோவில் பயணித்த சிலர் பொலிஸாரால் தடுத்து நிறுத்தப்பட்டனர்.

பின்னர், கடமையில் இருந்த இரு அதிகாரிகள் குறித்த ஓட்டோவை சோதனையிட முற்பட்டுள்ளனர்.

அப்போது ஓட்டோச் சாரதி மற்றும் பின் இருக்கையில் அமர்ந்திருந்த இருவர் மதுபோதையில் இருந்ததை அவதானித்த பொலிஸார், ஓட்டோச் சாரதியை கைது செய்ய முற்பட்டபோது குறித்த குழுவினர் இரு பொலிஸ் உத்தியோகத்தர்களையும் தாக்கி விட்டு தப்பிச் சென்றுள்ளனர்.

சம்பவம் தொடர்பில் வத்தளை பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்டதையடுத்து, வத்தளை பகுதியில் வைத்து மற்றுமொரு அதிகாரிகள் குழு சந்தேகநபர்கள் மூவரையும் ஓட்டோவுடன் கைது செய்துள்ளனர்.

கைது செய்யப்பட்ட சந்தேகநபர்கள் 25, 29 மற்றும் 30 வயதுடைய வத்தளை, மாபோல பிரதேசத்தை சேர்ந்தவர்கள் என தெரிவிக்கப்படுகிறது.

சந்தேகநபர்களின் தாக்குதலில் காயமடைந்த இரண்டு பொலிஸ் உத்தியோகத்தர்கள் தற்போது ராகம வைத்திய சாலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர். (அ)

# யாழ்.பல்கலைக்கழகத்தில் ஆழிப்பேரலை நினைவு!



யாழ்ப்பாணம், டிசெ. 27

ஆழிப்பேரலையின் 18ஆவது ஆண்டு நினைவேந்தல் யாழ் பல்கலைக்கழகத்தின் கைலாசபதி கலையரங்கு முன்றலில் இன்றைய தினம் உணர்வுபூர்வமாக முன்னெடுக்கப்பட்டது.

சுனாமி பேரலையில் உயிர் நீத்த உறவுகளின் நினைவுருவ படத்திற்கு அகவணக்கம் செலுத்தி ஈகைசுடரேற்றப்பட்டு மலரஞ்சலியும் செலுத்தப்பட்டது.

இதன் பொழுது யாழ். பல்கலைக்கழக மாணவர்



கள்,ஊழியர்கள் என பலரும் கலந்து கொண்டனர். (அ)

# பல்கலை மாணவர்கள் மீதான தாக்குதல் குறித்து விசாரணை

கொழும்பு, டிசெ. 27

பேராதனை பல்கலைக்கழகத்தின் சிரேஷ்ட மாணவர்களினால், புதிய மாணவர்கள் மீது நடத்தப்பட்ட தாக்குதல் சம்பவம் தொடர்பில் பல்கலைக்கழக நிர்வாகம் விசாரணைகளை ஆரம்பித்துள்ளது.

பொறியியல் மற்றும் கலைப்பீட மாணவர்கள் 9 பேர் அண்மையில் தாக்குதலுக்கு இலக்காகியிருந்தனர்.

பல்கலைக்கழகத்திலும், மாணவர் விடுதியிலும் வைத்து தாக்குதல் நடத்தப்பட்டுள்ளதுடன், பகிடிவதையுடன் தொடர்புடையதாக குறித்த சம்பவம் இடம்பெற்றுள்ளதாக தகவல்கள் தெரிவித்தன. (அ)

# 11 மாதங்களில் மட்டும் 3,596 ஆட்கடத்தல்கள்!

கொழும்பு, டிசெ. 27

பல்வேறு காரணங்களுக்காக இந்த வருடத்தின் முதல் 11 மாதங்களில் 3596 ஆட்கடத்தல்கள் இடம்பெற்றுள்ளதாக பொலிஸ் அறிக்கைகள் உறுதிப்படுத்துவதாக பேராதனை பல்கலைக்கழகத்தின் பொருளாதார மற்றும் புள்ளியியல் கற்கைகள் பிரிவின் பேராசிரியர் வசந்த அத்துகோரள தெரிவித்தார்.

கடந்த ஆண்டுடன் ஒப்பிடுகையில் கடத்தல்களின் எண்ணிக்கை சுமார் 2800 அதிகரித்துள்ளதாக அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

2021 ஆம் ஆண்டில் கடத்தல்களின் எண்ணிக்கை 835 ஆகும். (அ)

# ரயில் சேவைகள் வழமைக்கு!



கொழும்பு, டிசெ. 27

கொழும்பு கோட்டை மற்றும் பதுளைக்கு இடையிலான புகையிரத சேவைகளும், இரவு நேர அஞ்சல் ரயில் சேவைகளும் வழமைபோல இயங்கும் என ரயில்வே திணைக்களம் அறிவித்துள்ளது.

சீரற்ற காலநிலை காரணமாக குறித்த ரயில் சேவைகள் நேற்று முன் தினம் இரத்துச் செய்யப்பட்டன

இதேவேளை, நேற்று முன் தினம் நீரில் மூழ்கிய கண்டி ரயில் நிலையத்தில் இருந்து ரயில் பயணங்கள் வழமை போன்று இடம்பெறு வதாக ரயில்வே திணைக்களம் மேலும் தெரிவித்துள்ளது. (அ)

# ஆஷூ மாரசிங்கவுக்கு எதிரான விசாரணையின் நிலை என்ன?

## பொலிஸ் தலைமையகத்தில் முறைப்பாடு

கொழும்பு, டிசெ. 27

ஜனாதிபதியின் பாராளுமன்ற நடவடிக்கைகளுக்கான முன்னாள் ஆலோசகர், பேராசிரியர் ஆஷூ மாரசிங்க விலங்கொன்றை பாலியல் துஷ்பிரயோகம் செய்யும் காணொளி தொடர்பில் முன்னெடுக்கப்பட்டுள்ள விசாரணைகளின் முன்னேற்றத்தை அறியத்தருமாறு கோரி பீப்பள்ஸ் டுமோரோ அமைப்பு பொலிஸ் தலைமையகத்தில் முறைப்பாடு செய்தது.

பீப்பள்ஸ் டுமோரோ அமைப்பின் தலைவர், சட்டத்தரணி அமில எகொட மஹவத்த, சமூக செயற்பாட்டாளர் லெசில் டி சில்வா உள்ளிட்டவர்களும் பொலிஸ் தலைமையத்துக்கு சென்றிருந்தனர்.

ஆஷூ மாரசிங்கவுடையது என கூறப்படுகின்ற காணொளியின் உள்ளடக்கத்துக்கு அமைய அவர் பாரிய குற்றம் இழைத்துள்ளதாக அவர்கள் தெரிவித்துள்ளனர்.

பீப்பள்ஸ் டுமோரோ அமைப்பு தமது கடித்தில் சில விடயங்களை பொலிஸ் மா அதிபரிடம் கோரியுள்ளது.

யாரின் வழிகாட்டுதலுக்கு அமைய குற்றவாளிக்கு எதிராக இன்னமும் நடவடிக்கை எடுக்கப்படவில்லை? பேராசிரியர் ஆஷூ மாரசிங்க தொடர்பில் மேற்கொள்ளப்படவுள்ள உடனடி நடவடிக்கைகள் என்ன? எதிர்காலத்தில் இத்தகைய துன்புறுத்தல்கள் இடம் பெறாதிருப்பதற்கு எடுக்கப்படவுள்ள நடவடிக்கைகள் என்ன?

இதேவேளை, இந்த சம்பவம் தொடர்பில் முறையான விசாரணை நடத்துமாறு இலங்கை மிருக நல மற்றும் மிருக உரிமைகள் செயற்பாட்டாளர்களின் ஒன்றியம் பொலிஸ் மா அதிபரிடம் கடிதம் மூலம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

இலங்கை மிருக நல மற்றும் மிருக உரிமைகள் செயற்பாட்டாளர்களின் ஒன்றியம் இலங்கையின் விலங்குகள் நலனுக்காக செயற்படுகின்ற முக்கிய அமைப்பாகும்.

விசாரணைகளை துரிதப்படுத்தி நீதியை பெற்றுக் கொடுக்குமாறு அந்த அமைப்பு கோரியுள்ளது.

விசாரணைகளுக்கு அழுத்தம் பிரயோகிக்கப்படுவதை தடுக்குமாறும் குறித்த காணொளி உண்மையானது



என்றால் ஆஷூ மாரசிங்கவை கைது செய்து தண்டனை வழங்குமாறும் இலங்கை மிருக நல மற்றும் மிருக உரிமைகள் செயற்பாட்டாளர்களின் ஒன்றியம் வலியுறுத்தியுள்ளது.

இந்த செயற்பாடு சட்டத்தை மீறும் வகையில் அமைந்துள்ளதாகவும் குறித்த நபர் சிறுவர்கள், விலங்குகள் மற்றும் சமூகத்திற்கு அச்சுறுத்தல் எனவும் அந்த அமைப்பு அனுப்பியுள்ள கடிதத்தில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது. (அ)

# ஜனவரி 10 ஆம் திகதிக்கு முன் உள்ளூராட்சி சபைகள் கலைப்பு

## மஹிந்தானந்த அளுத்கமகே கூறுகிறார்

கொழும்பு,டிசெ.27

**எதிர்வரும் 10ஆம் திகதிக்கு முன்னர் நாட்டில் உள்ள அனைத்து உள்ளூராட்சி மன்றங்களும் கலைக்கப்படும் என பாராளுமன்ற உறுப்பினர் மஹிந்தானந்த அளுத்கமகே தெரிவித்துள்ளார்.**

தேர்தல்கள் ஆணைக்குழுவிற்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தின் பிரகாரம் அனைத்து உள்ளூராட்சி மன்றங்களும் 5 மற்றும் 10 ஆம் திகதிக்குள் கலைக்கப்படும் என அவர் தெரிவித்தார்.

உள்ளூராட்சி மன்றங்கள் கலைக்கப்பட்ட பின்னர் 14 நாட்களுக்குள் தேர்தலுக்கான வேட்புமனுக்கள் கோரப்படும் என மஹிந்தானந்த அளுத்கமகே கூறினார்.

இதற்கிடையில், தேர்தல் திகதியை ஜனவரி 5ஆம் திகதிக்கு முன்னதாக அறிவிப்போம் என தேர்தல் ஆணைக்குழு அறிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (அ)



# ஹெரோயினுடன் இளைஞன் துன்னாலையில் கைதானார்!

யாழ்ப்பாணம், டிசெ. 27

யாழ்ப்பாணம், துன்னாலைப் பகுதியில் 5 கிராம் 320 மில்லி கிராம் ஹெரோயின் போதைப்பொருளுடன் 33 வயதான இளைஞனர் ஒருவர் நெல்லியடி பொலிஸாரினால் கைது செய்யப்பட்டார்.

பொலிஸாருக்கு கிடைத்த ரகசிய தகவலின் அடிப்படையில் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை போதைப் பொருளுடன் இளைஞன் கைது செய்யப்பட்டார்.

கைது செய்யப்பட்ட இளைஞனை பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைத்து பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (அ)

# ஆடை விற்பனை நிலையத்தில் திருடிய சகோதரிகள் சிக்கினர்!

கொழும்பு, டிசெ. 27

கண்டியில் உள்ள ஆடை விற்பனை நிலையம் ஒன்றில் சுமார் 20,000 ரூபா பெறுமதியான ஆடைகளைத் திருடிய குற்றச்சாட்டில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த சகோதரிகள் இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர் என கண்டி தலைமையக பொலிஸார் தெரிவித்தனர்.

எதிர்வரும் புத்தாண்டுக்கு அணிவதற்காகவே இவ்வாறு ஆடைகளைத் திருடியதாக சந்தேக நபர்கள் இருவரும் கூறியதாகத் தெரிவிக்கப்பட்டது.

கைது செய்யப்பட்ட மூத்த சகோதரிக்கு 28 வயது என்றும் அவரது தங்கைக்கு 25 வயது எனவும் கண்டி தலைமையக பொலிஸ் அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (அ)

# பிரத்தியேக வகுப்புக்குச் சென்ற மாணவி காணாமல்போயுள்ளார்

கொழும்பு, டிசெ. 27

லுணுகலை பொலிஸ் பிரிவிற்கு உட்பட்ட சூரியகொட பகுதியில் தரம் 10ல் கல்வி பயிலும் 15 வயதுடைய மாணவி ஒருவர் காணாமல் போயுள்ளார்.

நேற்று முன் தினம் ஞாயிற்றுக்கிழமை காலை பிரத்தியேக வகுப்பு ஒன்றுக்கு சென்று வீடு திரும்பவில்லை என குறித்த மாணவியின் தாயாரினால் லுணுகலை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு ஒன்று பதிவு செய்யப்பட்டுள்ளது.

பொலிஸாரும் மாணவியின் உறவினர்களும் இணைந்து தேடுதலை மேற்கொண்டு வருகின்றனர்.

மேலதிக விசாரணைகளை லுணுகலை பொலிஸார் மேற்கொண்டுள்ளனர். (அ)

# இந்த ஆண்டு 6,504 பேர் எலி காய்ச்சலால் பாதிப்பு

கொழும்பு, டிசெ. 27

இவ்வருடம் ஆறாயிரத்து ஐந்நூற்று நான்கு பேர் எலிக் காய்ச்சலால் பாதிக்கப்பட்டுள்ளதாக தொற்றுநோயியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இந்த வருடத்தில் இது வரை 80 இற்கும் மேற்பட்டோர் எலிக்காய்ச்சலால் உயிரிழந்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அம்பாந்தோட்டை, இரத்தினபுரி, கேகாலை, காலி, களுத்துறை, மாத்தறை, மொனராகலை ஆகிய மாவட்டங்களில் எலிக் காய்ச்சலினால் பாதிக்கப்பட்டவர்கள் அதிகமாக பதிவாகியுள்ள தோடு, இந்த வருடம் நவம்பர் மாதத்தில் மாத்திரம் தொள்ளாயிரத்து அறுபத்து இரண்டு பேர் எலிக்காய்ச்சலினால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இரத்தினபுரி மாவட்டத் தில் அதிக எண்ணிக்கையி லான எலிக்காய்ச்சல் நோயாளர்கள் பதிவாகியுள்ளதுடன், அந்த எண்ணிக்கை 1094 ஆகும்.

வைரஸ் தொற்றுள்ள எலிகள், கால்நடைகள் மற்றும் நாய்களின் மலம் மற்றும் சிறுநீர் தண்ணீரில் கலப்பதன் மூலம் மனிதர்களுக்கு தொற்று ஏற்படலாம்.

விவசாயத்தில் ஈடுபடும் மக்கள் சேற்றில் இறங்குவதற்கு முன்னர் இந்த வைரஸ் தொற்று ஏற்படாமல் இருக்க அரசாங்கம் வழங்கும் நுண்ணுயிர் எதிர்ப்பிகளை உட்கொள்வது முக்கியம் எனவும் சுகாதார திணைக்களம் சுட்டிக்காட்டியுள்ளது.

நுண்ணுயிர் எதிர்ப்பிகளை சுகாதார மருத்துவ அதிகாரி அலுவலகம் மற்றும் பொது சுகாதார அதிகாரியிடம் பெறலாம். எனவே பயிர்ச்செய்கையில் ஈடுபடும் மக்கள் இதில் அதிக கவனம் செலுத்த வேண்டியது அவசியம் என சுகாதார திணைக்களம் தெரிவித்துள்ளது. (அ)



# டிலான் சேனநாயக்க மீது தாக்குதல் நான்கு பேர் பொலிஸாரினால் கைது

கொழும்பு, டிசெ. 27

சமூக ஊடக செயற்பாட்டாளர் டிலான் சேனநாயக்க கூரான ஆயுதத்தால் தாக்கப்பட்ட சம்பவம் தொடர்பில் நால்வர் கைது செய்யப்பட்டனர்.

கொழும்பு குற்றத்தடுப்பு பிரிவினரால் சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

கடந்த 14ஆம் திகதி இரவு நுகேகொடை, பாகொடை வீதியிலுள்ள டிலான் சேனநாயக்கவின் ஸ்டுடியோவிற்குள் நுழைந்த இருவரால் தாக்குதல் நடத்தப்பட்டிருந்தது.

கை மற்றும் காலில் வெட்டுக் காயங்களுக்குள்ளான டிலான் சேனநாயக்க களுபோவில போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டதன் பின்னர் சத்திரசிகிச்சை மேற்கொள்ளப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (அ)

# மக்களின் அரிசி நுகர்வு குறைந்தது கால்நடை தீவனத்துக்கு விற்பனை

கொழும்பு, டிசெ. 27

நாளாந்த அரிசி நுகர்வு குறைந்ததாலும், இறக்குமதி செய்யப்படும் அரிசியின் விலை சந்தையில் குறைந்ததாலும் உள்நாட்டு அரிசிக்கான தேவை குறைந்துள்ளது.

இதன் காரணமாக, நடுத்தர அளவிலான ஆலை உரிமையாளர்கள் அரிசியை கால்நடை தீவனத்திற்கு விற்பனை செய்து வருவதாக கூறப்படுகிறது.

கடந்த ஆண்டு ஜூலை மாதம் முதல், உள்ளூர் மற்றும் இறக்குமதி செய்யப்பட்ட அரிசியை கால்நடை தீவனமாக வழங்குவதைத் தடைசெய்து சிறப்பு வர்த்தமானி வெளியிடப்பட்டது. இவ்வாறான நிலையில் ஒரு கிலோ அரிசி 140 ரூபாவிற்கு விற்பனை செய்யப்படுவதாக குறிப்பிடப்படுகின்றது.

கடந்த சில வாரங்களில் மட்டும் 25 இலட்சம் கிலோ கிராம் அரிசி வடமேற்கு மாகாணத்தில் உள்ள கால்நடை பண்ணைகளுக்கு விற்பனை செய்யப்பட்டுள்ளது.

இதற்கு முன்னர் நாளாந்த அரிசி நுகர்வு சுமார் 65 இலட்சம் கிலோவாக இருந்த நிலையில் அது சுமார் 10 இலட்சம் கிலோ குறைந்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இந்த வகையில் பொலனறுவையில் உள்ள அரிசி ஆலையில் இருந்து கால்நடை தீவனத்திற்காக 20 தொன் அரிசியை குளியாப்பிட்டி பிரதேசத்தில் உள்ள கால்நடை பண்ணைக்கு ஏற்றிச் சென்ற லொறி ஒன்றை மின்னேரிய பொலிஸார் கடந்த சில நாட்களுக்கு முன்னர் கைப்பற்றினர்.

மேலும், அந்த பகுதியில் உள்ள களஞ்சியசாலை ஒன்றில் மனித பாவனைக்கு ஏற்ற சுமார் 140 மெற்றிக் தொன் அரிசி கால்நடை தீவனத்திற்காக சேமித்து வைக்கப்பட்டிருந்த நிலையில், நுகர்வோர் சேவை அதிகார சபைக்கு கிடைத்த தகவலின் அடிப்படையில் களஞ்சியசாலையின் உரிமையாளர் மற்றும் முகாமையாளர் கடந்த வாரம் கைது செய்யப்பட்டனர்.

கம்பஹா மாவட்ட நுகர்வோர் அதிகார சபையின் விசாரணைப் பிரிவினரால் மனித பாவனைக்கு ஏற்ற 21 மெற்றிக் தொன் அரிசியை மீட்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டது. (அ)

உங்கள் துயரங்களை பகிர்ந்துகொள்ள யாழ்ப்பாணத்திலிருந்து ஒரு தளம்
துயர் .நெற் THUYAR.NET
துயர் நெற்றில் பிரசுரமாகும் அனைத்து விளம்பரங்களும் யாழ்ப்பாணத்திலிருந்து வெளிவரும்
ஈழநாடு Eelanadu
ஈழநாடு தினசரியிலும் வெளியிடப்படும் யாழ்ப்பாணத்திலிருந்து ஒளிபரப்பாகும்
DAN NEWS
டான் நியூஸ் தொலைக்காட்சியிலும் ஒளிபரப்பாகும்
விபரங்களுக்கு: thuyar.net Tel: 0094 752 225 225

# சுனாமி நினைவேந்தலை முன்னிட்டு வவுனியாவில் விசேட பிரார்த்தனை



வவுனியா, டிசெ. 27

சுனாமியால் காவுகொள்ளப்பட்ட உறவுகளின் 18 ஆம் ஆண்டு நினைவு தினத்தை முன்னிட்டு வவுனியா மாவட்ட செயலகம் மற்றும் மாவட்ட அனர்த்த முகாமைத்துவம் ஆகியவற்றின் ஏற்பாட்டில் விசேட வழிபாடும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையும் நேற்று காலை 8.15 மணிக்கு இடம்பெற்றது.

வவுனியா கந்தசாமி ஆலயத்தில் இடம்பெற்ற இந் நிகழ்வில் உயிரிழந்தவர்கள் நினைவாக ஆத்ம சாந்தி பூசைகள் இடம்பெற்றதுடன் நெய் விளக்கேற்றி அஞ்சலி செலுத்தப்பட்டது.

இந்த நிகழ்வில் மாவட்ட அரச அதிபர் பி.ஏ. சரத்சந்திர, மேலதிக அரசாங்க அதிபர் தி. திரேஸ்குமார், மாவட்ட அனர்த்த முகாமைத்துவ மாவட்ட உதவிப் பணிப்பாளர் ஏ.எம்.ஆர்.கே ரத்நாயக்க, மாவட்ட செயலக அதிகாரிகள், உத்தியோகத்தர்கள், ஆலய பரிபாலன சபையினர், பொதுமக்கள் என பலரும் கலந்து கொண்டு நெய் தீபம் ஏற்றி இறந்த உறவுகளுக்காக அஞ்சலி செலுத்தினர். (அ)

# இலங்கையில் வரிகள் குறைவாகவே உள்ளன

## நிதி இராஜாங்க அமைச்சர் கூறுகிறார்

கொழும்பு, டிசெ. 27

இலங்கையின் வரி முறைமை கடந்த வாரத்தில் அதிகரிக்கப்பட்ட போதிலும் ஏனைய நாடுகளுடன் ஒப்பிடுகையில் எமது நாட்டில் வரி தொடர்ந்தும் குறைவாகவே உள்ளதாக நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாப் பிட்டிய தெரிவித்தார்.



அமைச்சில் இடம்பெற்ற கருத்தரங்கொன்றில் கலந்துகொண்டு உரையாற்றியபோதே அவர் இந்த கருத்தை வெளியிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

லாவோஸ், மியன்மார் மற்றும் பாகிஸ்தான் போன்ற நாடுகளும் பொருளாதாரப் பின்னடைவை கொண்டுள்ள போதிலும் குறித்த நாடுகளில் வரி விகிதாசாரம் இலங்கையை விட அதிகமாகவே உள்ளது.

அதேவேளை, இலங்கை பொருளாதார பின்னடைவைக் கொண்டுள்ள 34 இலட்சம் குடும்பங்களை பராமரிக்கும் நிலையில் அரசாங்கம் உள்ளது.

இதுதவிர, பல்கலைகழகம் மற்றும் பாடசாலை மாணவர்களுக்கு இலவச கல்வி உள்ளிட்ட அனைத்து அத்தியாவசிய சேவைகளை வழங்குவதற்காக கணிசமான நிதியை வருடாந்தம் ஒதுக்கிட்டுள்ளது.

இந்த நிலையில் எமது நாட்டில் வரி தொடர்ந்தும் குறைவாகவே உள்ளது-என்றார். (அ)

# 4 வகை பயிர்ச் செய்கைகள் யாழ். மாவட்டத்தில் பாதிப்பு

யாழ்ப்பாணம், டிசெ. 27

யாழ்ப்பாணத்தில் வழமையாக மேற்கொள்ளப்படும் பயிர்ச் செய்கையில் நான்கு விதமான பயிர்ச் செய்கை பூச்சிய உற்பத்தியாக அடையாளப்படுத்தப்பட்டுள்ளதாக யாழ்.மாவட்ட விவசாயப் பணிப்பாளர் கைலேஸ்வரன் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

சிறிய தினை, பெரிய வெங்காயம், உருளைக்கிழங்கு மற்றும் இஞ்சி ஆகிய ஆகிய நான்கு பயிர் செய்கைகளை விவசாயிகள் கைவிட்டமையால், அவை பூச்சிய நிலையை அடைந்துள்ளன.

குறிப்பாக சங்கானை பிரதேச செயலர் பிரிவில் அராலிப் பகுதியில் பெரிய வெங்காய பயிர்ச் செய்கையும், கோப்பாய், உடுவில் பிரதேச செயலர் பிரிவில், உருளைக்கிழங்கு பயிர்ச் செய்கையும், தினை, இஞ்சி ஆகிய பயிர்ச் செய்கையும் அதிகளவில் இடம்பெற்று வந்த நிலையில் காலநிலை மாற்றம் காரணமாக விவசாயிகள் செய்கைகளைக் கைவிட்டுள்ளமையால், அவை பூச்சிய நிலையை அடைந்துள்ளன- என்றார். (அ)

# போதைப்பொருளுக்கு அடிமையானோருக்கு சிறைச்சாலைகளில் புனர்வாழ்வு வேண்டாம்

## நீதிச்சேவை ஆணைக்குழு அறிவிப்பு

கொழும்பு, டிசெ. 27

ஹெரோயின் மற்றும் ஐஸ் உள்ளிட்ட ஆபத்தான போதைப்பொருளுக்கு அடிமையானவர்களை சிறைச்சாலை புனர்வாழ்வுக்கு அனுப்பவேண்டாம் என அனைத்து நீதிவான்களுக்கும் நீதிச்சேவை ஆணைக்குழு அறிவித்துள்ளது.

அத்தகைய போதைப் பொருளுக்கு அடிமையான வர்களை முடிந்தவரை சிறைச் சாலை புனர்வாழ்வுக்கு அனுப்புவதற்குப் பதிலாக, புனர்வாழ்வு ஆணையாளர் நாயகம் பணியகம், அபாயகரமான போதைப்பொருள் கட்டுப் பாட்டு மையங்கள் அல்லது சமூக திருத்தங்களுக்கு அனுப்பு மாறு நீதிச் சேவை ஆணைக்குழு நீதிவான்களுக்கு கடிதம் எழுதியுள்ளது.

இதேவேளை,போதைக்கு அடிமையானவர்கள் சிறைச் சாலைகளுக்கு அதிகள வில் அனுப்பப்படுவதனால் சிறைச்சாலைகளின் உள்ளகக் கட்டுப்பாட்டில் பாதிப்பு ஏற்பட்டுள் ளதாகவும், சிறைச்சாலைகளில் ஒழுக்கத்தை பேணுவதில் சிக்கல் ஏற்பட்டுள்ளதாகவும் சிறைச்சாலைகள் ஆணையாளர் நாயகம் துஷார உபபுல்தெனிய நீதி அமைச்சுக்கு எழுதியுள்ள கடிதத்தில் கூறியுள்ளார். (அ)

# மத்தள விமான நிலையத்தால் வரவை விட செலவே அதிகம்!

கொழும்பு, டிசெ. 27

2021 ஆம் ஆண்டு மத்தள சர்வதேச விமான நிலையத்தின் செயற்பாட்டுச் செலவு அதே காலப்பகுதியில் அதன் வருமானத்தை விட 21 மடங்கு அதிகமாகும் என கணக்காய்வாளர் நாயகம் அறிவித்துள்ளார்.

விமான நிலையம் மற்றும் வானூர்திச் சேவைகள் நிறுவனத்தின் 2021 ஆம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கைகளை கடந்த 24ஆம் திகதி ஆய்வுக்கு உட்படுத்தும்போதே கணக்காய்வாளர் நாயகம் இந்த தகவலை வெளியிட்டார்.

மேலும், இரத்மலானை, யாழ்ப்பாணம் மற்றும் மட்டக்களப்பு சர்வதேச விமான நிலையங்களின் செயற்பாடுகளை கணக்காய்வாளர் நாயகம் எடுத்துக்காட்டியுள்ளார்.

விமான நிலையம் மற்றும் வானூர்தி சேவைகள் நிறுவனம் 2021 ஆம் ஆண்டிற்கான தமது வருடாந்த அறிக்கையை அண்மையில் வெளியிட்டது.

அதன்படி, 2012 மார்ச் 28 மற்றும் 2016 மார்ச் 24 ஆகிய திகதிகளில், அந்த நிறுவனம், 74,397 மில்லியன் ஜப்பானிய யென் நிதியுதவிக்காக ஜப்பான் சர்வதேச ஒத்துழைப்பு நிறுவனத்துடன் இரண்டு ஒப்பந்தங்களை மேற்கொண்டது.

பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலைய அபிவிருத்தித் திட்டத்தின் இரண்டாம் கட்டத்துக்காக இந்த நிதி பயன்படுத்தப்படவிருந்தது.

எனினும், 2020 மார்ச் 4 ஆம் திகதி பெரும் தாமதத்துடன் 82 சதவீத நிதி வழங்கப்பட்டது.

எனினும்,விமான நிலையம் மற்றும் வானூர்தி சேவைகள் நிறுவனத்தினால், 2013 ஏப்ரல் 20 முதல் 2022 ஏப்ரல் 20 வரை, குறைவான நிதி பயன்படுத்தப்பட்டமையால், 359.5 மில்லியன் ரூபா நிதி அர்ப்பணிப்புக் கட்டணமாக செலுத்தப்பட்டது.

இதன்போது, ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் நிறுவனத்தின் கடனாளிகளின் நிலுவைத் தொகையான 1.4135 பில்லியன் ரூபா நிதியை மீளப்பெறுவதற்கு எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என்றும் கணக்காய்வாளர் நாயகம் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை, 2021 ஆம் ஆண்டில் மத்தள சர்வதேச விமான நிலையத்தின் இயக்கச் செலவு 2.02 பில்லியன் ரூபாவாக இருந்தது.

இந்த தொகையானது, அதே கால கட்டத்தில் ஈட்டப்பட்ட வருமானத்தை விட இருபத்தொரு மடங்கு அதிகமாகவும் இருந்தது.

மதிப்பாய்வு செய்யப்பட்ட ஆண்டிற்கான வானூர்தி நிலையத்தின் வரிக்குப் பிந்திய நிகர இழப்பு 4.44 பில்லியன் ரூபாவாகவும், 2017 முதல் 2021 வரையிலான வரிக்குப் பிந்திய ஒட்டுமொத்த நிகர இழப்பு 20.59 பில்லியன் ரூபாவாகவும் இருந்தது.

மத்தள விமான நிலையத்தின் பயணிகளின் எண்ணிக்கை வருடாந்தம் ஒரு மில்லியனாக இருந்த போதிலும், கடந்த ஐந்து வருடங்களில் மொத்தப் பயணிகளின் எண்ணிக்கை 91,747 ஆகவும் கடந்த ஐந்து வருடங்களின் மொத்த வானூர்திப் பயணங்கள் 2,396 ஆகவும் இருந்தது.

இதேவேளை, 2019 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட யாழ்ப்பாண சர்வதேச விமான நிலையம் கடந்த 3 வருடங்களாக தொடர்ச்சியாக நட்டங்களைச் சந்தித்து வருவதாக கணக்காய்வாளர் நாயகம் குறிப்பிட்டுள்ளார்

மட்டக்களப்பு சர்வதேச விமான நிலையத்தின் செயற்பாடுகள் குறித்து அறிக்கையளித்த கணக்காய்வாளர் நாயகம், விமான நிலையம் ஆரம்பிக்கப்பட்டு நான்கு வருடங்களாக எவ்வித வருமானத்தையும் ஈட்டவில்லை எனவும், அதேவேளை கடந்த நான்கு வருடங்களாக, அதற்கு 74.64 மில்லியன் ரூபா செலவு செய்யப்பட்டுள்ளது என்றும் குறிப்பிட்டுள்ளார். (அ)

# மரண அறிவித்தல்

| தோற்றம் | | மறைவு |
| --- | --- | --- |
| 26 - 09 - 1931 |  | 21 - 12 - 2022 |

## சின்னத்தம்பி பரம்சோதி

யாழ். கந்தரோடையைப் பிறப்பிடமாகவும், யோகபுரம் மத்தி மல்லாவி, சுவிஸ் ஆகிய இடங்களை வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்தம்பி பரம்சோதி அவர்கள் 21.12.2022 புதன்கிழமை அன்று இயற்கை எய்தினார்.

அன்னார், காலஞ்சென்ற சின்னத்தம்பி, சின்னத்தங்கச்சி தம்பதிகளின் இளைய மகனும், சிவபாக்கியம் (ஓய்வுபெற்ற அதிபர்) அவர்களின் அன்புக் கணவரும், காலஞ்சென்றவர்களான மகாதேவி, விசாலாட்சி, வைத்திலிங்கம்பிள்ளை, பிறைசூடி, திலகர் மற்றும் கோபாலன் (வட்டக்கச்சி), பரமேஸ்வரி (சுந்தரோடை) ஆகியோரின் அன்புச் சகோதரரும், தபோநிதி (யாழ்ப்பாணம்), கலாநிதி (ஜேர்மனி), வரதராஜன் (சுவிஸ்– செங்காளன்), கிருபாகரன் (சுவிஸ்–மனடோர்ப்), காலஞ்சென்ற முகுந்தன், தயாநிதி (சுவிஸ்– சூறிச்), அனந்தன் (சுவிஸ்–சூரிச்), சற்சொரூபி (சுவிஸ்– லுசேர்ன்) ஆகியோரின் அன்புத் தந்தையும், காயாரோகணன், காலஞ்சென்ற சிவநாதன், தாரணி, சுபாஜினி, ஞானேந்திரன், கலைமகள், ஜெயசீலன் ஆகியோரின் அன்பு மாமனாரும், சௌமி, சௌயா, கயானன், சௌயந்தி, அபூரன், ஆரணன், அன்பரசி, அபிசனா, செந்துஜன், புகிதன், ஆரணியா, அருணன், அபிநாத், அதிசயா, ஷண்முகப்பிரியா, ஹற்சன், அபிசன், மயூரிகா ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதி கிரியைகள் 28.12.2022 நண்பகல் 1.30 அளவில் சுவிஸ்சர்லாந்தில் நடைபெறும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்
குடும்பத்தினர்.

# கொரோனா வைரஸ் ஒமிக்ரான் பிஎவ்7 திரிபு:

## மீண்டும் தடுப்பூசி போட்டுக்கொள்ள வேண்டுமா?

- பிரமிளா கிருஷ்ணன்

ஒமிக்ரான் பிஎவ் 7 திரிபு மூலமாக சீனாவில் மீண்டும் கொரோனா தொற்று வேகமெடுத்துள்ளது. கொரோனா ஊரடங்கு ஏற்படுத்திய பாதிப்பில் இருந்து தற்போதுதான் உலக பொருளாதாரம் மீண்டுவரும் வேளையில், மீண்டும் சீனாவில் இந்த புதிய திரிபு காரணமாக தொற்று பாதிப்பு அதிகரித்து வருவது உலகளவில் கவனம் பெற்றுள்ளது.

அதேநேரம், இந்த புதிய வகை கொரோனா வைரசின் தாக்கத்தை எதிர்கொள்ள இதுவரை எடுத்துக் கொண்ட தடுப்பூசிகள் போதுமா, புதிய தடுப்பூசி எதுவும் தேவையா, என்ன முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் தேவை என பல சந்தேகங்கள் எழுந்துள்ளன.


அமெரிக்காவில் கொரோனா வைரசுக்கான தடுப்பு மருந்துகள் தொடர்பான ஆய்வுகளில் ஈடுபட்டுள்ள தமிழர் கார் முத்துமணி. இவர், ஓர் உயிரி மருந்து நிறுவனத்தின் முதன்மை ஆய்வு அதிகாரியாக செயல்படுகிறார்.

அவரிடம் தற்போது நடைபெறும் ஆராய்ச்சி, கொரோனாவை தடுக்கும் புதிய தடுப்பு மருந்துகள் பற்றி விளக்கம் கேட்டோம். பேட்டியிலிருந்து...



சீனாவில் தற்போது கொரோனா வைரஸ் தாக்கம் அதிகரித்துள்ளதாகவும், மீண்டும் மக்கள் அங்கு இறந்து போவதாகவும் செய்திகள் வந்துள்ளன. சீனாவில் தொடங்கிய கொரோனா மீண்டும் அங்கு அச்சுறுத்தலாக அமைந்துள்ளது ஏன்?

கொரோனா முதல் அலையில் சீனாவில் அதிக பாதிப்புகள் இருந்தன. அதன் பின்னர், பிற நாடுகளுக்கு பரவியது. அங்கு கொரோனா கட்டுக்குள் வந்தபோது, பிற நாடுகளில் ஊரடங்கு பிறப்பிக்கும் நிலை ஏற்பட்டது.



கொரோனா வைரசுக்கு தடுப்பூசி வந்ததும், பல்வேறு நாடுகளிலும், தடுப்பூசி பயன்பாடு அதிகரித்தது. அதனால், இரண்டாம் அலைக்கு பின்னர், கொரோனாவின் தாக்கம் பெரும்பாலும் உலகளவில் கட்டுக்குள் இருந்தது. பல நாடுகளில் தடுப்பூசி முகாம் பெரியளவில் நடைபெற்றது.

ஆனால் சீனாவை பொறுத்தவரை, பிற நாடுகளில் கண்டறியப்பட்ட வெற்றிகரமான தடுப்பூசிகளை சீன அரசாங்கம் பயன்படுத்தவில்லை. அங்கு, அவர்களாகவே ஒரு தடுப்பூசியை அறிமுகம் செய்தார்கள், இருந்தபோதும், பிற நாடுகளைப் போல, தடுப்பூசி முகாம்கள் அதிகளவில் ஊக்குவிக்கப் பட்டதா என்பது கேள்விக்குறியாக இருந்தது.

தற்போது புதிய கொரோனா திரிபு அங்கு வந்துள்ளதோடு, இறப்புகளும் அதிகரித்துள்ளன. அந்த நாட்டில் இருந்து பலரும் பல நாடுகளுக்கு சென்றிருப்பார்கள் என்பதால், உலகளவில் மீண்டும் இந்த கொரோனா தாக்கம் கவனம் பெற்றுள்ளது.

இதுவரை தடுப்பூசி போட்டுக்கொண்டவர்கள், பூஸ்டர் ஊசி போட்டுக்கொண்டவர்கள் இருக்கிறார்கள். தற்போது வெளியாகியுள்ள புதிய வகை கொரோனா வைரஸை சமாளிக்க இதுவரை எடுத்துக்கொண்ட தடுப்பூசிகள் போதுமானதாக இருக்குமா? மீண்டும் நான்காவது முறையாக கொரோனா தடுப்பூசி தேவையா?

நான்காவது தடுப்பூசி தேவையா இல்லையா என்று தற்போது உறுதியாக நாம் சொல்லமுடியாது. நான்காவது முறையாக நீங்கள் தடுப்பூசி போட்டுக் கொள்வதால், புதிய வகை கொரோனவால் பாதிப்பு ஏற்படாது என்று எந்த உறுதியும் சொல்லமுடியாது. தடுப்பூசி போடுவதால் உங்கள் நோய் எதிர்ப்பு சக்தி வலுப்படும். ஆனால் அதனால் கொரோனா தாக்கத்தில் இருந்து தப்பித்துக்கொள்ளலாம் என்று உறுதியாக சொல்லமுடியாது.

### கொரோனா வைரஸை ஏன் கட்டுப்படுத்த முடியவில்லை. அதன் திரிபுகள் உருவாவதை தடுக்கமுடியாதா?

வைரஸ் என்பது தன்னை எப்படியாவது தக்கவைத்துக் கொள்ளவேண்டும் என்ற உறுதியோடு பரவும் என்பதால், முதலில் நம்மை நாம் தற்காத்துகொள்வதுதான் சிறந்த வாய்ப்பாக இருக்கும்.

எளிமையாக புரிந்துகொள்வதற்காக உங்களுக்கு விளக்குகிறேன். ஒரு சிக்கலான பாதையில் நீங்கள் பயணிக்கும் போது, வளைந்து நெளிந்து செல்வீர்கள், உங்கள் இலக்கை அடைய முயற்சிப்பீர்கள், கடினமான பாதையாக அது இருந்தால், முயற்சி செய்வீர்கள் தானே, அது போலதான் இந்த கொரோனா வைரஸ் தனது இருப்பை உறுதி செய்துகொள்ள, அதனுடைய தன்மையை மாற்றிக் கொண்டு வாழ முயற்சிக்கும். அதனால்தான் மியுடேஷன்ஸ் (மரபணுப் பிறழ்வு) நடக்கிறது. புதிய வகை கொரோனா வைரஸ் திரிபுகள் அவ்வப்போது உருவாவதை தடுக்கமுடியாது.

> “நான்காவது முறையாக நீங்கள் தடுப்பூசி போட்டுக் கொள்வதால், புதிய வகை கொரோனவால் பாதிப்பு ஏற்படாது என்று எந்த உறுதியும் சொல்லமுடியாது. தடுப்பூசி போடுவதால் உங்கள் நோய் எதிர்ப்பு சக்தி வலுப்படும். ஆனால் அதனால் கொரோனா தாக்கத்தில் இருந்து தப்பித்துக் கொள்ளலாம் என்று உறுதியாக சொல்லமுடியாது.



கொரோனா வைரஸ் முதல் அலையில் இருந்த அதே தன்மையில் தற்போது இல்லை. பலவகையில் அது மாறிவிட்டது. இதுவரை சுமார் 10 முதல் 15 வகையான திரிபுகளாக தன்னை உருமாற்றிக் கொண்டுள்ளது. அறிவியல்பூர்வமாக சொல்வதென்றால், ஆர்.என்.ஏ மற்றும் டி.என்.ஏ என்ற இரண்டு வகையாக வைரஸ் உள்ளது. கொரோனா வைரஸ் ஓர் ஆர்.என்.ஏ வைரஸ், இது தனது உருமாற்றிக்கொண்டே இருக்கும். இதனை கட்டுப்படுத்துவது சிரமம்தான்.



எடுத்துக்காட்டாக, எச்.ஐ.வி என்பது ஓர் ஆர்.என்.ஏ வைரஸ், இதுவரை எச்.ஐ.வி வைரஸில் சுமார் 400கும் அதிகமான திரிபுகள் வந்துவிட்டன. ஒரு சில வகையான எச்.ஐ.வி வைரஸ் மேற்கத்திய நாடுகளில் மட்டும் காணப்படுகிறது, ஒரு சில வகை ஆசிய நாடுகளில் காணப்படுகிறது. அதாவது, எச்.ஐ.வி வைரஸ் ஒவ்வொரு பகுதியில் உள்ள நோய் எதிர்ப்பு மண்டலத்தை எதிர்த்து எவ்வாறு தன்னை நிலைநிறுத்திக் கொள்ளமுடியுமோ அதற்கு ஏற்றவாறு தன்னை மாற்றிக்கொண்டு வாழ்கிறது. அதே போன்ற நிலை தான் தற்போது கொரோனா வைரசிலும் காணப்படுகிறது.

### கொரோனாவில் புதிய வகை திரிபு பரவி வருகிறது. இதற்கு தடுப்பூசி கண்டறிவதற்கான ஆய்வுகள் தொடங்கிவிட்டனவா?

கொரோனா வைரஸ் முதல் அலையில் இருந்தபோது, அதனை முழுமையாகப் புரிந்துகொண்டு, அதனை எதிர்ப்பதற்கான தடுப்பூசி கண்டறியப்பட்டது. ஒரு வைரஸின் பேட்டர்ன்-ஐ (மாதிரி) கண்டறிவதற்குதான் அதிக காலம் தேவைப்படும். அதன் திரிபு வகையில் பெரிய மாற்றங்கள் இருக்காது. ஆனால் இதுபோன்ற ஒவ்வொரு திரிபுக்கும் தடுப்பூசி என்பது அறிவியல் உலகில் தேவையற்றது என்று கருதப்படும்.

ஏனெனில், நீங்கள் தடுப்பு மருந்து கண்டறிவதற்கு ஒரு சில தினங்கள்தான் ஆகும். ஆனால் அதனை முதலில், விலங்குகளிடம் சோதனை செய்யவேண்டும், பின்னர் மனிதர்களிடம் சோதனை செய்யவேண்டும். அதற்கான காலம் அதிகம் தேவைப்படும். அதற்குள் மீண்டும் வேறு திரிபு வருவதற்கான வாய்ப்புள்ளது என்பதால், பொதுவாக திரிபுகளுக்கு தடுப்பூசி கொண்டுவருவது என்பது வரவேற்பை பெறுவதில்லை.

ஆனால், தற்போது, உலகளவில் பல்வேறு தடுப்பூசி ஆய்வு நிறுவனங்கள் பேன் கொரோனா என்ற பல்வேறு விதமான கொரோனா திரிபுகளுக்கும் சேர்ந்த வகையில் ஒரு தடுப்பூசியை கண்டறியும் சோதனைகள் நடத்தி வருகின்றன. பல்வேறு நாடுகளிலும் தற்போது இந்த ஆராய்ச்சி நடைபெற்று வருகிறது. கொரோனா வைரஸ் என்பது, டெங்கு, சிக்குன் குனியா, பறவைக் காய்ச்சல் உள்ளிட்ட நோய்களை போல, நாம் எப்போதும் கவனமாக இருக்கவேண்டிய நோய்களின் பட்டியலில் வந்துவிட்டது. தடுப்பு மருந்து வரும்வரை தற்காப்பு என்பதுதான் ஒரே வழி.

### புதிய வகை கொரோனா வைரஸ் திரிபுகளில் இருந்து மக்கள் தங்களை தற்காத்து கொள்வது எப்படி?

தடுப்பூசிகள் மூலம் நம்மை தற்காத்துக்கொள்வது என்பது தற்போது இரண்டாவது வாய்ப்பாகதான் நாம் கருதவேண்டும். முதல் வாய்ப்பு என்பது நம்மை நாம் தற்காத்துக்கொள்வதுதான் சிறந்தது. கொரோனா வைரஸ் என்பது ஆர்.என்.ஏ வைரஸ், அதாவது விரைவாக தன்னை உருமாற்றிக்கொண்டே இருக்கும் தன்மை கொண்டது.

தடுப்பூசி கண்டறிந்து, அதனை நாம் போட்டுக்கொள்வதற்கு ஒரு காலம் தேவைப்படும். ஆனால் அந்த காலத்தை விட குறுகிய காலத்தில் கொரோனா வைரஸ் தனது அடுத்த திரிபு நிலைக்கு செல்வதற்கு வாய்ப்பு உள்ளது.

அதனால், தடுப்பூசியை மட்டுமே வாய்ப்பாக நாம் கருதுவதைவிட, நம்மை தற்காத்துக்கொள்ளும் வாய்ப்பு உள்ளது என்பதை முதன்மையாகக் கருதவேண்டும்.

அரசாங்கம் அறிவிப்பு கொடுக்கும் வரை காத்திருக்காமல், நாமாகவே கூட்டநெரிசலான இடங்களை தவிர்க்கலாம்.

முகக்கவசம் அணிவதை ஒரு பழக்கமாக வைத்துக்கொள்ளலாம். நாம் இருக்கும் இடங்களை தூய்மையாக வைத்துக் கொள்வது நல்லது.

பயத்தை விடுத்து, நம் நோய் எதிர்ப்பு சக்தியை அதிகரிப்பதில் கவனம் செலுத்தலாம். (பிபிசி)

ஈழநாடு



# ஜேர்மனி தீவிர வலதுசாரிகள் நாடாளுமன்றை தாக்கி.. அரசாங்கத்தை கவிழ்க்க முயன்ற சதியின் பின்னணி!!

**- ஐங்கரன் விக்கினேஸ்வரா**




தீவிர வலதுசாரிகள் மற்றும் முன்னாள் இராணுவ பிரமுகர்கள் அடங்கிய குழு ஜேர்மனி பாராளுமன்ற கட்டிடமான ரீச்ஸ்டாக்கை தாக்கி ஆட்சியை கைப்பற்ற தயாராகி வந்ததாகக் கூறப்படுகிறது.

இதனைத் தொடர்ந்து டிசம்பர் மாத ஆரம்பத்தில் ஜேர்மனி அரசாங்கத்தை கவிழ்க்க சதித்திட்டம் தீட்டிய சந்தேகத்தின் பேரில் ஜேர்மனி முழுவதும் நடத்தப்பட்ட சோதனையில் 25 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

Reich Citizens (Reichsbuerger) இயக்கத்தின் ஆதரவாளர்களுக்கு எதிராக 11 ஜேர்மன் கூட்டாட்சி மாநிலங்களில் உள்ள 130 இடங்களில் சுமார் 3,000 அதிகாரிகள் சோதனை நடத்தினர்.

ஒரு சிறிய ஆயுதக் குழுவுடன் ஜேர்மன் பாராளுமன்றத்திற்குள் நுழைவதற்கு உறுதியான தயாரிப்புகளை செய்ததாக இந்த இயக்கத்தின் உறுப்பினர்கள் சந்தேகிக்கப்படுவதாக அரசாங்க வழக்குரைஞர்கள் தெரிவித்தனர்.

கைது செய்யப்பட்ட 25 நபர்கள் ஜேர்மன் குடிமக்கள் என்றும், வலதுசாரி பயங்கரவாத அமைப்பில் உறுப்பினர் என்ற சந்தேகத்தின் பேரில் தற்போது தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

**வலதுசாரி சித்தாந்தத்தின் எழுச்சி:**

கைது செய்யப்பட்ட தீவிர வலதுசாரி அமைப்பினர் பயங்கரவாத செயல்களில் ஈடுபாடு இருப்பதாகக் கூறப்பட்டு விசாரிக்கப்பட்டது.




மற்ற சந்தேக நபர்கள் பாடன்-வட்டுர்ட்டெம்பேர்க், பவேரியா, பெர்லின், ஹெஸ்ஸே, தாழ் சாஸோனி, சாஸோனி, துரிங்கிங் ஆகிய மாநிலங்களிலும், அண்டை நாடுகளான ஆஸ்திரியா மற்றும் இத்தாலியிலும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

2021 நவம்பர் மாத இறுதியில் இருந்து தங்கள் இலக்கை பலத்தால் மட்டுமே அடைய முடியும் என்பதை அவர்கள் அறிந்திருந்ததால் அதை செயல்படுத்த தயாராகி வருவதாக வழக்கறிஞர்கள் தெரிவித்தனர். இவ்அமைப்பு ஜேர்மனியில் ஏற்கனவே இருந்த அரச ஒழுங்கை முறியடித்து, அதற்குப் பதிலாக அவர்களது சொந்த அரச வடிவத்தை கொண்டு வர வேண்டும் என்ற குறிக்கோளுடன் பயங்கரவாத அமைப்பை நிறுவியதாக குற்றம் சாட்டப்பட்டது.

ஜேர்மனியில் கடந்த சில வருடங்களாக தீவிர வலதுசாரி சித்தாந்தத்தின் தீவிரமான எழுச்சி ஏற்பட்டுள்ளது.

**மீள நாஷிச வளர்ச்சி ?**

ஜேர்மனியின் 2ம் உலக போருக்குப் பிந்தைய அரசியல் அமைப்பை ஏற்காத Reich Citizens movement என்ற அமைப்பைச் சேர்ந்தவர்களே ஜேர்மனிய நாடாளுமன்றத்தில் தாக்குதல் நடத்துவதற்கு திட்டமிட்டிருந்தார்கள்.

13 ஆம் ஹெய்ன்றிக் இளவரசர் எனக் கூறப்படும் 71 வயதான ஒரு நபர் இக்குழுவின் திட்டத்தில் முக்கிய நபராக இருந்ததாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்த வலதுசாரி குழுவில் முன்னாள் இராணுவ அங்கத்தவர்களும், ஜேர்மனிய அரசாங்கத்தை கவிழ்க்க சதி செய்தநபர்களில் அடங்குவர்.

நவம்பர் 2021 இன் இறுதியில் நிறுவப்பட்ட இந்த அமைப்பைச் சேர்ந்தவர்கள், ஜேர்மனியில் தற்போதுள்ள அரசு அமைப்பைக் கவிழ்த்து அதன் சொந்த அரசாங்கத்தை நிறுவுவதை நோக்கமாகக் கொண்டிருந்தனர்.

மேலும் இராணுவ வழிமுறைகளைப் பயன்படுத்துவதன் மூலமும், அரச பிரதிநிதிகளுக்கு எதிரான வன்முறையின் மூலமும் மட்டுமே இந்தத் திட்டத்தை நிறைவேற்ற முடியும் என்பதை அமைப்பின் உறுப்பினர்கள் நோக்கமாக கொண்டிருக்கிறார்கள். இதில் கொலைக் குழுவும் அடங்கும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

கைது செய்யப்பட்டவர்கள் மொட்டைத் தலையுடனும், உலாவும் நாஜிக்கள் அல்ல. மாறாக உயர் சமூகத்தைச் சேர்ந்தவர்கள். இளவரசர் றொயிஸ் ஹைன்ரிச் அவர்களின் தலைவராக குற்றம் சாட்டப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்டவர்களில் டாக்டர் பட்டம் பெற்ற வழக்கறிஞர், மருத்துவர், விமானி, ஒரு இசைகலைஞர், பேர்லின் நீதிபதியும் ஜேர்மனிக்கான தீவிர வலதுசாரி மாற்றீட்டு கட்சியின் (AFD) முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரான பிர்கிட் மல்சாக்-வின்கெமான், முன்னாள் உயரடுக்கு சிறப்புப் படைகள் தளபதி மாக்சி மில்லியான் உட்பட, அப்படையினரின் முன்னாள் உறுப்பினர்களும் அடங்குவர்.

தேடப்பட்ட இடங்களில், பாடன்-வூர்ட்டெம்பேர்க்கில் உள்ள கால்வ் நகரிலுள்ள கேஎஸ்கே இன் முகாமும் அடங்கும். இது ஏற்கனவே வலதுசாரி பயங்கரவாத ஹன்னிபால் வலையமைப்பின் மையமாக இருந்தது.

றைஸ் குடிமக்கள் அமைப்பின் ஒரு பகுதியாகவும், வலதுசாரி சித்தாந்தத்தின் ஆதரவாளர்களாகவும் அடையாளம் காணப்பட்ட இந்த பயங்கரவாத வலையமைப்பு, குறிப்பிட்ட சதித் திட்டங்கள் மற்றும் மேம்பட்ட இராணுவத் தயாரிப்புகளை கொண்டிருந்ததாக அரசு குற்றம் சாட்டி உள்ளது.

இந்தக் குற்றச்சாட்டுகள் ஜேர்மனிய மத்திய குற்றவியல் விசாரணைக் குழுவின் விசாரணைகளின் அடிப்படையில் அமைந்தன. இது கடந்த செப்டம்பர் தொடக்கத்தில் இருந்து பல நூறு அதிகாரிகளின் ஈடுபாட்டுடன் குற்றம் சாட்டப்பட்டவர்களின் தகவல் தொடர்புகளைக் கண்காணித்து இடைமறித்து வருகிறது. வங்கிக் கணக்குகள் விசாரிக்கப்பட்டு, வலைத் தள கலந்துரையாடல் குழுக்களும் கண்காணிக்கப்பட்டன.

**நிறைவேறாத திட்டம்:**

ஹெய்ன்றிக் இளவரசர் தலைமையிலான ஒரு குழு நவம்பர் 2021 முதல் ஜேர்மனியில் அதிகாரத்தைக் கைப்பற்றுவதற்கும், அதன் சொந்த அரசு கட்டமைப்புகளை நிறுவுவதற்கும் திட்டமிடுவதற்காக தொடர்ந்து இரகசியமாக சந்தித்து வந்திருக்கிறது.

ஹெய்ன்றிக் எதிர்கால அரச தலைவராக இருக்க வேண்டும், மற்ற உறுப்பினர்கள் நீதி, வெளிவிவகாரங்கள் மற்றும் சுகாதாரம் உட்பட பல்வேறு அமைச்சகங்களுக்குப் பொறுப்பேற்க வேண்டும் என திட்டமிடப்பட்டிருந்தது.

ஆயுத பலத்தால் திட்டமிடப்பட்ட அதிகாரத்தை கைப்பற்றுவதற்கு அமைப்பின் இந்த பகுதியே பொறுப்பு எனவும், உள்நாட்டு பாதுகாப்பு பிரிவுகள் என்று அழைக்கப்படும் ஏற்கனவே அமைக்கப்பட்டுள்ள அமைப்பின் மூலம் நிறைவேற்றப்பட வேண்டும் என்பதே அதன் நோக்கமாகும்.

இவ் அமைப்பின் வி.பி. ரூடிகர் தலைமையிலான இராணுவப் பிரிவின் முன்னணி ஊழியர்கள், ஏனைய பணிகளுடன், புதிய உறுப்பினர்களை ஆட்சேர்ப்பு செய்தல், ஆயுதங்கள் மற்றும் பிற உபகரணங்களை வாங்குதல், இடைமறிக்க முடியாத தகவல் தொடர்பு மற்றும் தகவல் தொழில்நுட்பத்தை நிறுவுதல் ஆகியவற்றைக் கையாண்டனர்.

தீவிர வலதுசாரிகளும் அதன் சித்தாந்தமும் எந்த அளவிற்கு ஊடுருவி, அரசு எந்திரம் மற்றும் ஆளும் வட்டங்களால் பாதுகாக்கப்படுகின்றன என்பதை தற்போது இந்தக் குழுவின் நடவடிக்கைகள் உறுதிப்படுத்தி உள்ளன.

பல வருடத்திற்கு முன்பு இக்குழு உருவாக்கப்பட்டது என்ற கூற்று வெறுமனே நம்பத்தகுந்ததல்ல. AFD, Reichsbürger பிரிவினர் மற்றும் ஹன்னிபால் வலைப்பின்னல் போன்ற பயங்கரவாத குழுக்களுடனான அதன் தொடர்புகள் பற்றி விரிவாக ஊடகத்துறையினரால் வெளிப்படுத்தப்பட்டபோதிலும், பாதுகாப்புப் படைகள் பெரும்பாலும் அப்படியே இருந்தன என்று வெளிப்படையாக அறியப்பட்டுள்ளது.

அதே நேரத்தில் உளவுத்துறை முகவர்கள் அதன் உறுப்பினர்களை சுற்றியிருந்தனர். காஸல் பிராந்திய தலைவர் வால்டர் லூப்கவின் கொலையாளி ஸ்ரேரு சூழலில் இருந்து வந்தவரும் மற்றும் அதிகாரிகளால் ஒரு குற்றவியல் வலதுசாரி தீவிரவாதி என்று அறியப்பட்டவருமாவார். அத்துடன் அவரது பேச்சுகள் யூத-விரோத, ஜனநாயக விரோத மற்றும் சதித்தனமான அறிக்கைகளால் நிறைந்திருந்தன.

ஜேர்மனியின் 2ம் உலக போருக்குப் பிந்தைய அரசியல் அமைப்பை ஏற்காத Reich Citizens movement என்ற அமைப்பைச் சேர்ந்தவர்களே ஜேர்மனிய நாடாளுமன்றத்தில் தாக்குதல் நடவடிக்கையானது மீளவும் நாஷிச வளர்ச்சி ஜேர்மனியில் தீவிரமாக உருப்பெறுமா என சந்தேகப்பட வேண்டியுள்ளது.



# போராட்டம் நடத்தியவர்கள் தேர்தலில் நிற்கவேண்டும்

## அமைச்சர் நிமல் கோரிக்கை

கொழும்பு, டிசெ. 27

உள்ளூராட்சி மன்றத் தேர்தல் உரிய நேரத்தில் நடத்தப்படும் என்பதனால் அரசாங்கத்திற்கு எதிரான போராட்டங்களுக்கு தலைமை தாங்கியவர்கள் தேர்தலில் போட்டியிடவேண்டும் என அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா தெரிவித்தார்.

பொருளாதார நெருக்கடி குறித்து தற்போது விமர்சனங்களை முன்வைப்பவர்கள் நெருக்கடியான சூழ்நிலையில் அரசாங்கத்தை பொறுப்பேற்கவில்லை என்றும் இக்கட்டான நிலையில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவே அதனை பொறுப்பேற்றார் என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

பொருளாதார ரீதியில் பாதிக்கப்பட்ட மக்கள், ஜனநாயக ரீதியில் போராட்டத்தில் ஈடுபட, ஆட்சிக்கு வர முடியாத தரப்பினர் ஜனநாயக போராட்டத்தை வன்முறை போராட்டமாக மாற்றி அமைத்தார்கள் என்றும் அவர் குற்றம் சாட்டினார்.

மக்கள் மத்தியில் இவர்களுக்கு எந்தளவிற்கு நல்ல வரவேற்பு உள்ளது என்பதை தெரிந்துகொள்ளப் போராட்டத்தில் ஈடுப்படுபவர்கள் தேர்தலில் போட்டியிட்டு மக்கள் ஆணையை பெற்றுக்காட்ட வேண்டும் என்றும் அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா கூறினார். (அ)

# லீசிங் வாகனங்களை இனிமேல் நினைத்தவாறு தூக்கமுடியாது!

கொழும்பு, டிசெ. 27

குத்தகை நிறுவனங்கள் மற்றும் நிதி நிறுவனங்கள் வாகனங்களை கையகப்படுத்துவதற்கு, வாகன உரிமையாளர் எதிர்ப்பு தெரிவித்தால், குறித்த நிறுவனங்கள் மாவட்ட நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்து சட்ட ரீதியாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என பொலிஸ்மா அதிபர் வெளியிட்டுள்ள புதிய சுற்றறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், வாகனத் திருட்டு மற்றும் திருட்டு போன்ற குற்றங்கள் நடந்தால், பொலிஸார் சட்ட ரீதியாக நடவடிக்கை எடுக்கவேண்டும் என்றும் சுற்றறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

குத்தகை அல்லது நிதி நிறுவனங்கள் வாகனங்கள் அல்லது உபகரணங்களைப் பெறுவது குறித்து சில பொலிஸ் நிலையங்களில் உரிமையாளரால் செய்யப்படும் முறைப்பாடுகள் நிராகரிக்கப்பட்டுள்ளதாகவும், இனிவரும் காலங்களில் அத்தகைய முறைப்பாடுகளை ஏற்று உரிய விசாரணை நடத்தி தேவையான சட்ட நடவடிக்கை எடுக்கவேண்டும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

# இவ்வருடம் முதல் 11 மாதங்களில் 497 கொலைகள் இடம்பெற்றுள்ளன

கொழும்பு, டிசெ. 27

இந்த வருடத்தின் முதல் 11 மாதங்களில் 497 கொலைகள் இடம்பெற்றுள்ளதாக பொலிஸ் அறிக்கைகள் உறுதிப்படுத்துவதாக பேராதனை பல்கலைக் கழகத்தின் பொருளாதார மற்றும் புள்ளிவிபரவியல் திணைக்களத்தின் பேராசிரியர் வசந்த அத்துக்கோரள தெரிவித்தார்.

அந்த கொலைகளில் 46 சதவீதமானவை (223 கொலைகள்) கடுமையான தாக்குதலால் நடந்தவை என்றும் அவர் கூறினார். (அ)

# எரிபொருள் விலை குறையலாம்

கொழும்பு, டிசெ. 27

உள்நாட்டில் எரிபொருள் விலை அடுத்த சில மாதங்களில் குறைக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

உக்ரைன் மீதான ரஷ்யாவின் படையெடுப்பை அடுத்து மசகு எண்ணெய் விலை கணிசமாக அதிகரித்தது.

இருப்பினும் தற்போது சர்வதேச சந்தையில் விலை குறைந்துள்ள நிலையில், அடுத்த சில மாதங்களில் விலை மேலும் குறையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இதேவேளை நாட்டில் எரிபொருளுக்கான நாளாந்த தேவை குறைந்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. (அ)

# கல்வி நிர்வாக சேவைக்கான பரீட்சை விரைவில் நடக்கும்

கொழும்பு, டிசெ. 27

கல்வி நிர்வாக சேவையில் சுமார் 800 பணியிடங்கள் வெற்றிடமாக உள்ளதாக கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்தார்.

அதற்கமைய அந்த வெற்றிடங்களுக்கான பரீட்சை மிக விரைவில் நடத்தப்படும் என்றும் அமைச்சர் கூறினார்.

இதேவேளை, அரசாங்கத்தின் புதிய ஓய்வூதியக் கொள்கையின் படி, இம்மாதம் 31ஆம் திகதி ஓய்வுபெறவுள்ள கல்வி அமைச்சின் அதிகாரிகளின் வெற்றிடங்களுக்கு புதிய அதிகாரிகள் நியமிக்கப்படவுள்ளனர் என்றும் அமைச்சர் குறிப்பிட்டார். (அ)

# அரச சேவையை முறைப்படுத்த விசேட குழு நியமித்த பிரதமர்

கொழும்பு, டிசெ. 27

அரச சேவையை முறையான முறையில் நடத்துவது தொடர்பான தீர்மானங்களை எடுப்பதற்காக பிரதமரின் செயலாளர் அனுர திஸாநாயக்க தலைமையில் குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது.

அரச உத்தியோகத்தர்கள் 60 வயதில் ஓய்வு பெறவேண்டும் என்ற அரசாங்கத்தின் தீர்மானத்திற்கு அமைய இவ் வருட இறுதியில் பெருமளவிலான அரச உத்தியோகத்தர்கள் ஓய்வு பெறவுள்ள நிலையில் அரச உத்தியோகத்தர்களை சம நிலைப்படுத்தும் நோக்கில் இந்தக் குழு நியமிக்கப்பட்டுள்ளதாக குறிப்பிடப்படுகின்றது. பிரதமரின் செயலாளர் தலைமையிலான குழுவில் பொது நிர்வாக அமைச்சின் செயலாளர், ஒருங்கிணைந்த சேவைகள் பணிப்பாளர் நாயகம், முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் பணிப்பாளர், உள்துறை அமைச்சின் மேலதிக செயலாளர் ஆகியோர் நியமிக்கப்பட்டுள்ளனர். (அ)

## கல்வி tv CHANNEL-1

**27.12.2022**
**செவ்வாய்க்கிழமை**

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 05.15 | தரம்-06 | தமிழ் |
| 06.00 | தரம்-07 | விஞ்ஞானம் |
| 06.45 | தரம்-08 | கணிதம் |
| 07.30 | தரம்-09 | விஞ்ஞானம் |
| 08.15 | தரம்-10 | விஞ்ஞானம் |
| 09.00 | மாணவர்களுக்கானது | ஆலோசனை |
| 09.15 | க.பொ.த.உயர்தரம் | தமிழ் |
| 10.15 | க.பொ.த.உயர்தரம் | பொருளியல் |
| 11.15 | க.பொ.த.உயர்தரம் | கணிதம் |
| 12.15 | General knowledge | General knowledge |
| 12.30 | 06 TO சாதாரணதரம் | English |
| 01.15 | க.பொ.த. சா.தரம் | English |
| 02.00 | க.பொ.த. சா.தரம் | தமிழ் |
| 02.45 | க.பொ.த. சா.தரம் | ICT |
| 03.30 | க.பொ.த சா.தரம் | வரலாறு |
| 04.15 | க.பொ.த. சா.தரம் | புவியியல் |
| 05.00 | A/Lவினாத்தாள் | Live Telecast உயிரியல் |
| 06.00 | தரம்-05 | புலமைப்பரிசில் |
| 07.00 | A/Lவினாத்தாள் | மறுஒளிபரப்பு உயிரியல் மறு ஒளிபரப்பு அனைத்துப்பாடங்களும் |
| 08.00 | தரம்- 05 | புலமைப்பரிசில் |
| 09.00 | க.பொ.த.உயர்தரம் | தமிழ் |
| 10.00 | க.பொ.த.உயர்தரம் | பொருளியல் |
| 11.00 | க.பொ.த.உயர்தரம் | கணிதம் |
| 12.00 | 06 TO Learning English | English |
| 12.45 | க.பொ.தா சா.தரம் | English |
| 01.30 | க.பொ.தா சா.தரம் | தமிழ் |
| 02.15 | க.பொ.தா சா.தரம் | ICT |
| 03.00 | க.பொ.தா சா.தரம் | வரலாறு |
| 03.45 | க.பொ.தா சா.தரம் | புவியியல் |
| 04.30 | தரம்-10 | விஞ்ஞானம் |

## கல்வி tv CHANNEL - 2

**27.12.2022**
**செவ்வாய்க்கிழமை**

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 06.00 | பஞ்சபுராணம் | பஞ்சபுராணம் |
| 06.15 | நற்கருணை | நற்கருணை |
| 06.30 | திருக்குறள் பொருள் | நாள் ஒரு திருக்குறள் |
| 06.45 | PLAY GROUP | கதை |
| 07.30 | முன்பள்ளி | ஆரம்பநிலை பாடங்கள் |
| 08.15 | தரம்-01 | சுற்றாடற்கல்வி |
| 09.00 | தரம்-02 | கணிதம் |
| 09.45 | தரம்-03 | சுற்றாடற்கல்வி |
| 10.30 | தரம்-03 | தமிழ் |
| 11.15 | தரம்-04 | சுற்றாடற்கல்வி |
| 12.30 | தரம்-04 | தமிழ் |
| 01.15 | தரம்-05 | சுற்றாடற்கல்வி |
| 02.00 | தரம்-05 | தமிழ் |
| 02.45 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 03.30 | PLAY GROUP | கதை |
| 04.15 | முன்பள்ளி | ஆரம்பநிலை பாடங்கள் |
| 05.00 | தரம்-01 | English Cartoon |
| 05.15 | தரம்-02 | கணிதம் |
| 06.00 | தரம்-03 | சுற்றாடற்கல்வி |
| 06.45 | தரம்-03 | தமிழ் |
| 07.30 | தரம்-04 | சுற்றாடற்கல்வி |
| 08.15 | தரம்-04 | தமிழ் |
| 09.00 | தரம்-05 | சுற்றாடற்கல்வி |
| 09.45 | தரம்-05 | தமிழ் |
| 10.30 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 11.15 | தரம்-03 | சுற்றாடற்கல்வி |
| 12.30 | தரம்-03 | தமிழ் |
| 01.15 | தரம்-04 | சுற்றாடற்கல்வி |
| 02.00 | தரம்-04 | தமிழ் |
| 02.45 | தரம்-05 | சுற்றாடற்கல்வி |
| 03.30 | தரம்-05 | தமிழ் |
| 04.15 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 05.00 | English | CARTOON |
| 05.30 | English | பாட்டு |

# ஆசிரியருக்கு பிரியாவிடை



அம்பாறை, டிசெ. 27

33 வருட ஆசிரிய சேவையில் இருந்து ஓய்வு பெற்ற ஆசிரியருக்கு பிரியாவிடை நடத்திய பின்பு அவருக்கு ஆளுயர மாலைகள் சூட்டி பாண்ட் வாத்தியம் முழங்க இடை யிடையே பட்டாசுகள் வெடிச் சத்தம் முழங்க அதிபர் ஆசிரியர்கள் மற் றும் மாணவர்கள் கண்ணீர் மல்க அவரது வீட்டுக்கு கொண்டுசென்று விட்ட சம்ப வம் கடந்த வாரம் நடைபெற் றது.

இச் சம்பவம் நாவிதன்வெளி அன்னமலை மகா வித்தியால யத்தில் இடம் பெற்றது.

அங்கு கணிதபாடம் கற் பித்த ஆசிரியர் வெள்ளக்குட்டி மகேஸ்வரன் தனது 33 வருட சேவையின் பின்பு கடந்த வியா ழன் அன்று விடைபெற்ற போது அவருக்கான பிரியாவிடை நிகழ்வு நடைபெற்றது.

அங்கு அவருக்காக பாராட்டு மற்றும் பரிசுகள் பொன்னாடை போர்த்தி வாழ்த்தப்பட்டது.

(அ)

# தடைசெய்யப்பட்ட சிகரெட் வைத்திருந்த பெண் கைது




அம்பாறை, டிசெ. 27

சட்டவிரோதமாக தடைசெய்யப்பட்ட சிக ரெட்டுக்களை தம்வசம் வைத்திருந்த பெண் சந் தேக நபரை கல்முனை விசேட அதிரடிப்படை யினர் கைது செய்துள்ள னர்.

அம்பாறை மாவட் டம் நிந்தவூர் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட வீடு ஒன்றில் சந்தேகத்திற்கிடமாக சட்டவிரோத நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுவதை அறிந்து அங்கு சென்ற கல் முனை விசேட அதிரடிப்படை யினர் இச்சோதனை நடவடிக் கையை மேற்கொண்டனர்.

இதன் போது சுமார் 800 வெளிநாட்டு சிகரெட்டுக்களை சட்டவிரோதமாக தம்வசம் வைத்திருந்த 54 வயதுடைய குடும்ப பெண் சந்தேகத்தின் அடிப்படையில் கைது செய் யப்பட்டுள்ளதுடன் சந்தேக நபர் வசம் இருந்து வெளி நாட்டு சிகரெட் அடங்கிய பக்கெற்றுக்கள் மீட்கப்பட் டன.

(அ)

# அம்பாறையில் உணர்வுபூர்வ ஆழிப்பேரலை நினைவேந்தல்



அம்பாறை, டிசெ. 27

ஆழிப்பேரலை அனர்த்தம் (சுனாமி) ஏற்பட்ட 18 ஆவது வருட நினைவு நினைவேந்தல் நிகழ்வுகள் நேற்று அம்பாறை மாவட்டத்தில் உணர்வு பூர்வ மாக இடம்பெற்றன.

ஆழிப்பேரலை அனர்த்தத் தால் பாதிக்கப்பட்ட மற்றும் ஆயிரக்கணக்கான உயிர்கள் காவு கொள்ளப்பட்ட மாவட் டத்தின் கரையோரப் பிரதேசங் களில் குறித்த நினைவேந்தல் நிகழ்வுகள் இடம் பெற்றன.

உறவுகளை இழந்த பெரு மளவானோர், உயிர் நீத்தவர்க ளுக்காக நிறுவப்பட்டுள்ள நினைவுத் தூபிகளில், மலர் வைத்து, ஈகைச் சுடரேற்றி உணர்வு பூர்வமாக அஞ்சலி செலுத்தினர்.

முஸ்லிம் பிரதேசங்களில் பள்ளிவாசல்களில் இறந்த உற வுகளுக்காக கத்தமுல் குர்ஆன் ஓதி தமாம் செய்யப்பட்டது டன், துஆ பிரார்த்தனைகளும் இடம்பெற்றன.

குறிப்பாக மூவாயிரத்துக் கும் மேற்பட்ட ஆழிப்பேரலை யால் காவு கொள்ளப்பட்ட ஜனாஷாக்கள் நல்லடக்கம் செய்யப்பட்ட சம்மாந்துறை காட்டுப்பள்ளிவாசல் மைய வாடியில் உறவினர்கள் திரண்டு பிரார்த்தனைகளில் ஈடுபட் டனர்.

மேலும் இந்த நினைவேந் தல் நிகழ்வுகளின் போது தம் உறவுகளை நினைந்து கண்ணீர் மல்க பெரும்பாலானோர் தமது கவலையை வெளிப்படுத் திய காட்சி உருக்கமாக அமைந் திருந்தது.

அம்பாறை மாவட்டத்தில் மிக மோச மாகப்பாதிக்கப்பட் டதும், உயிரிழப்புக்கள் கூடிய துமான மருதமுனை, பாண்டி ருப்பு, கல்முனை, கல்முனைக் குடி, சாய்ந்தமருது, மாளிகைக் காடு, காரைதீவு, நிந்தவூர் முத லான பிரதேசங்களில் இடம் பெற்ற நினைவேந்தல் நிகழ்வுகளில் பெருமளவா னோர் கலந்து கொண்டனர்.

கல்முனை 1சீ கிராம சேவை உத்தியோகத்தர் பிரிவில் காவு கொள்ளப்பட்ட 599 பேருக் கென அமைக்கப்பட்டுள்ள நினைவுத்தூபி வளாகத்தில் பிரதான நினைவேந்தல் நிகழ்வு இடம்பெற்றது.

இதன் போது நினைவு உரைகளும் இடம்பெற்றதுடன் பிரபல கவிஞர் பூவை சரவ ணன், இழந்த உறவுகள் குறித்த உருக்கமான கவிதை ஒன்றை யும் வாசித்தார். (அ-06)

# பிள்ளைகளுக்கு கற்றல் உபகரணங்கள்



மட்டக்களப்பு, டிசெ. 27

மட்டக்களப்பு மாவட்டத் தில் தெரிவு செய்யப்பட்ட ஊடகவியலாளர்களின் பிள் ளைகளுக்கு இலங்கை காப் போம் நிறுவனத்தினால் கற்றல் உபகரணங்கள், புத்தகப்பை மற்றும் பாதணிகள் வழங்கும் நிகழ்வு மட்டு. ஊடக அமையத்தில் இடம்பெற்றது.

மட்டு. ஊடக அமை யத்தின் தலைவர் சிரேஷ்ட ஊடக வியலாளர் வா.கிருஷ்ண குமார் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ் வுக்கு பிரதம அதிதியாக இலங்கை காப்போம் நிறுவனத்தின் நிறைவேற்றுப் பணிப்பாளர் கு.பிரதிப்கரன் கலந்துகொண்டு கற்றல் உபகர ணங்கள், புத்தகப்பை மற்றும் பாதணிகளை வழங்கினார்.(அ)

# ஆயுர்வேத வைத்தியர்களுக்கான ஒருநாள் செயலமர்வு திருமலையில்



திருமலை, டிசெ. 27

திருகோணமலை மாவட் டத்தில் பதிவு செய்யப்பட்ட மற்றும் பதிவு செய்யப்படாத ஆயுள்வேத பரம்பரை வைத்தியர்களுக்கான ஒருநாள் செயலமர்வு திருகோணமலை முதலமைச்சின் கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது.

கிழக்கு மாகாண சுதேச மருத்துவத் திணைக்கள மாகாண ஆணையாளர் வைத்திய கலாநிதி திருமதி இ.ஸ்ரீதனின் தலைமையில் இடம்பெற்ற இச்செயலமர் வுக்கு சுகாதார அமைச்சின் சுதேச மருத்துவ அபிவிருத்திப் பிரிவின் பணிப்பாளர் பி.தயா னந்தன், கொழும்பு ஆயுள்வேத வைத்தியசாலையின் வைத் தியர்களான ரீ.சிவகுமார், லலித் அலவத்கொட, கிழக்கு மாகாண சுதேச மருத்துவத் திணைக்கள திட்டமிடல் பிரிவின் வைத்தியர்களான எஸ்.சிவச்செல்வன், எஸ்.சதீஸ் உள்ளிட்ட வைத்தியர்கள் பலர் கலந்துகொண்டனர்.

இச்செயலமர்வில் பரம்பரை வைத்தியர்கள் தொடர்பான சட்டதிட்டங்கள் மற்றும் ஒழுக்க நெறிமுறைகள் பற்றி இடம்பெற்றது.

குறிப்பாக, நோயாளர்கள் தொடர்பாக கடைப்பிடிக்க வேண்டிய நெறிமுறைகள், தொழில் தொடர்பாகவும் அதே தொழிலில் ஈடுபட்டுள்ள சக வைத்தியர்கள் தொடர்பாக கடைப்பிடிக்கவேண்டிய நெறி முறைகள், சமூகம் தொடர்பாக கடைப்பிடிக்கவேண்டிய நெறி முறைகள், சட்டம் மற்றும் நீதி தொடர்பான நெறிமுறைகள் பற்றியே இச்செலமர்வு இடம்பெற்றது.

பரம்பரை வைத்தியர்கள் எதிர்நோக்கும் பிரச்னைகள் மற்றும் பதிவு செய்யும் நடை முறைகள் பற்றி பரம்பரை வைத்தியர்களினால் கேட்கப் பட்ட கேள்விகளுக்கு மிக விரி வான விளக்கங்களும் இதன் போது வழங்கி வைக்கப்பட்ட துடன் கொழும்பு ஆயுள்வேத திணைக்களத்தினால் வெளி யீடு செய்யப்பட்ட சித்த மருந்து முறையியல் பதார்த்த விஞ்ஞானம் பகுதி - 1 என்ற நூலை சுகாதார அமைச்சின் சுதேச மருத்துவ அபிவிருத்திப் பிரிவின் பணிப்பாளர் பி.தயா னந்தன் அவர்களினால் மாகாண ஆணையாளர், வைத் தியர்கள் மற்றும் பரம்பரை வைத்தியர்கள் ஆகியோர்க ளுக்கு வழங்கி வைத்தமையும் குறிப்பிடத்தக்கது.

(அ)

# சீ.டி. கடை என்ற போர்வையில் மாவா விற்ற ஒருவர் சிக்கினார்!



அம்பாறை, டிசெ. 27

சினிமா இறுவெட்டு (சீ.டி.) கடை என்ற போர்வையில் பல் கலைக்கழக மாணவர்கள் பாட சாலை மாணவர்களை இலக்கு வைத்து போதை தரும் மாவா விற்பனையில் சூட்சும மாக ஈடுபட்ட சந்தேக நபரை கல் முனை விசேட அதிரடிப்படை யினர் கைது செய்துள்ளனர்.

அம்பாறை மாவட்டம் பெரிய நீலாவணை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட பாண்டி ருப்பு பிரதான வீதியில் உள்ள சினிமா இறுவெட்டு (சீ.டி.) கடை ஒன்றில் சந்தேகத்திற்கி டமாக இளைஞர்கள் ஒன்று கூடுவது தொடர்பில் கடந்த ஞாயிற்றுக்கிழமை இரவு விசேட அதிரடிப்படையி னருக்கு தகவல் ஒன்று கிடைத் தமைக்கமைய இச்சோதனை நடவடிக்கையை கல்முனை விசேட அதிரடிப்படையினர் மேற்கொண்டனர்.

இதன் போது இறுவெட்டு (சி.டி) கடை என்ற போர்வை யில் போதை தரும் மாவா விற்பனையில் சூட்சுமமாக ஈடுபட்ட கண்டி மாவட்டம் மடவளை பகுதியை சேர்ந்த 25 வயதுடைய சந்தேக நபர் கைது செய்யப்பட்டுள்ளதுடன் சந்தேக நபர் வசம் இருந்து மாவா போதைப் பொருள் அடங்கிய பக்கெற்றுக்கள் மீட்கப்பட்டன.

மேலதிக விசாரணையை முன்னெடுத்த பின்னர் குறித்த இளைஞனினால் நடத்தப் பட்ட கடையில் மறைத்து வைக்கப்பட்ட தடை செய்யப் பட்ட மாவா போதைப்பொரு ளும் கைப்பற்றப்பட்டது. (அ)

# அமெரிக்கா, கனடாவை தொடர்ந்து தாக்குகிறது கடுமையான உறைபனி

## 38 பேர் உயிரிழப்பு



நியூயோர்க், டிசெ. 27

அமெரிக்கா மற்றும் கனடாவைத் தொடர்ந்து தாக்கும் கடுமையான உறைபனி காரணமாக குறைந்தபட்சம் 38 பேர் உயிரிழந்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

நியூயோர்க் மாநிலத்தில் உள்ள பப்பலோ நகரம் மிக மோசமாக பாதிக்கப்பட்டுள்ள அதேவேளை அமெரிக்கா முழுவதும் 34 பேர் உயிரிழந்துள்ளதாக அதிகாரிகள் கூறுகின்றனர்,

இதேவேளை, கனடாவில் பிரிட்டிஷ் கொலம்பியாவின் மேற்கு மாகாணத்தில் உள்ள மெரிட் நகருக்கு அருகே பேருந்து கவிழ்ந்ததில் நான்கு பேர் உயிரிழந்துள்ளனர்.

அடுத்த சில நாட்களில் புயல் குறையும் என அறிவிக்கப்பட்டுள்ள நிலையில் அத்தியாவசியமற்ற பயணங்களைத் தவிர்க்குமாறு அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது.

பல நாட்களாக பேரழிவை ஏற்படுத்தியுள்ள பனிப் புயல் காரணமாக ஆயிரக்கணக்கான விமான சேவைகளும் இரத்து செய்யப்பட்டுள்ளன.

(அ)



# மாலைதீவு முன்னாள் ஜனாதிபதிக்கு சிறை!

மலே, டிசெ. 27

இலஞ்சம் மற்றும் சட்டவிரோத பணப் பரிவர்த்தனை வழக்கில் மாலைதீவு முன்னாள் ஜனாதிபதி அப்துல்லா யாமீனுக்கு 11 ஆண்டுகள் சிறைத் தண்டனை விதித்து, அந்நாட்டின் குற்றவியல் நீதிமன்றம் உத்தரவிட்டது.

மேலும், அவருக்கு 5 மில்லியன் அமெரிக்க டொலர் அபராதமும் விதிக்கப்பட்டுள்ளது.

சுற்றுலாவுக்கு பெயர் பெற்ற மாலைதீவு ஜனாதிபதியாக கடந்த 2013 முதல் 2018 வரை பதவி வகித்தவரான அப்துல்லா யாமீன், அரசுக்கு சொந்தமான தீவு ஒன்றை குத்தகைக்கு அளிக்க இலஞ்சம் பெற்றதாக வழக்கு தொடரப்பட்டது.

இந்த வழக்கில் அவர் மீதான குற்றச்சாட்டுகளை உறுதி செய்த குற்றவியல் நீதிமன்றம், சட்டவிரோத பணப் பரிவர்த்தனை குற்றத்துக்கு 7 ஆண்டுகள், இலஞ்சம் பெற்ற குற்றத்துக்கு 4 ஆண்டுகள் என மொத்தம் 11 ஆண்டுகள் சிறைத் தண்டனை விதித்துள்ளது.

அப்துல்லா யாமீனுக்கு சிறைத் தண்டனை விதிக்கப்படுவது இது முதல்முறையல்ல. கடந்த 2019ஆம் ஆண்டு அரசுப் பணத்தை சொந்த ஆதாயத்துக்கு பயன்படுத்தியதாக தொடரப்பட்ட வழக்கில் 5 ஆண்டுகள் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டார். ஆனால், அவருக்கு எதிரான ஆதாரங்களில் குறைபாடுகள் உள்ளதாகவும், குற்றச்சாட்டுகள் முழுமையாக நிரூபிக்கப்படவில்லை என்றும் கூறி, 2 ஆண்டுகளுக்கு பிறகு அந்த தீர்ப்பை உச்சநீதிமன்றம் இரத்து செய்தது.

கடந்த 2018ஆம் ஆண்டு மாலைதீவு ஜனாதிபதி தேர்தலில் போட்டியிட்ட அப்துல்லா யாமீன், தற்போதைய ஜனாதிபதி இப்ராஹிம் முகமது சோலியிடம் தோல்விகண்டார் என்பது குறிப்பிடத்தக்கது. (அ)



# ஆளில்லா விமானம் மூலம் வட கொரியா ஊடுருவல்!

## தென்கொரியா குற்றச்சாட்டு

சியோல், டிசெ. 27

தமது வான்பரப்பிற்குள் பல ஆளில்லா விமானங்களை வட கொரியா பறக்கவிட்டதாக தென் கொரிய இராணுவ அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

ஜியோங்கி மாகாணத்தைச் சுற்றியுள்ள எல்லைப் பகுதிகளில் தென் கொரிய வான்வெளியை ஆளில்லா விமானங்கள் ஊடுருவியதாக தெரிவித்தனர்.

ஐந்தாண்டுகளில் முதல் முறையாக வான்வெளிக்குள் ஊடுருவிய ஆளில்லா விமானங்கள் மீது எதிர்த்தாக்குதல் நடத்தியதாகவும் தென் கொரியா அறிவித்துள்ளது.

இந்த ஆளில்லா விமானங்கள் தென்கொரியாவின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் என்றும் அவை உளவு பார்க்கவும் தாக்குதல் நடத்தவும் பயன்படுத்தப்படலாம் என்றும் எச்சரிக்கப்பட்டுள்ளது.

இந்த நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த தென் கொரிய போர் விமானங்களில் ஒன்றான கே.ஏ.-1 இலகுரக விமானம் விபத்துக்குள்ளாகியுள்ளதாக தென்கொரிய இராணுவம் கூறியுள்ளது.

இறுதியாக வட கொரியாவின் ஆளில்லா விமானம் ஜூன் 2017 இல் எல்லையைத் தாண்டியபோது இரு நாடுகளுக்கும் இடையில் பதற்றம் அதிகரித்தமை குறிப்பிடத்தக்கது. (அ)

# ரஷ்ய அணு ஆயுதத் தாக்குதல் விமான தரிப்பிடத்தில் வெடிப்பு!

மொஸ்கோ, டிசெ. 27

ரஷ்யப் படைகள் உக்ரைனில் உள்ள பல நகரங்களின் மீது ரொக்கட் தாக்குதலை நடத்தின. பேச்சுக்கு தயாராக இருப்பதாக ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடின் அறிவித்த பின்னர் இந்த தாக்குதல் நடந்தது.

ரஷ்யா கடந்த ஞாயிற்றுக்கிழமை கார்கிவ் பகுதியில் உள்ள குபியன்ஸ்க் மாவட்டத்தில் 10 இற்கும் மேற்பட்ட ரொக்கெட் தாக்குதல்களை நடத்தியது, குபியன்ஸ்க்-லைமன் முன்னணியில் உள்ள 25 இற்கும் மேற்பட்ட நகரங்கள் மீது ஷெல் தாக்குதல் நடத்தியது, ஐபோரிஜியாவில் கிட்டத்தட்ட 20 நகரங்களைத் தாக்கியது என்று உக்ரைனின் உயர் மட்ட இராணுவக் கட்டளை தெரிவித்துள்ளது.



ரஷ்யாவின் பாதுகாப்பு அமைச்சகம் ஞாயிற்றுக் கிழமை குபியன்ஸ்க் - லைமன் தொடர்பு வரிசையில் சுமார் 60 உக்ரைனியப் படைவீரர்களைக் கொன்றதாக வும், உக்ரேனிய இராணுவ உபகரணங்களை அழித்த தாகவும் கூறியது.

இதேவேளை, ரஷ்யாவின் ஏங்கெல்ஸ் நகரில் டிசெம்பர் 25 அன்று இரவு முழுவதும் வெடிப்புகள் மற்றும் வான்வழித் தாக்குதல் சைரன்கள் பதிவாகியுள்ளதாக உள்ளூர் ரஷ்ய டெலிகிராம் சனல்களை மேற்கோள் காட்டி உக்ரைன்ஸ்கா பிராவ்டா தெரிவித்துள்ளது.

மொஸ்கோவிற்கு தென்கிழக்கே 730 கிலோமீற்றர் தொலைவிலும், உக்ரைனில் இருந்து நூற்றுக்கணக்கான கிலோமீற்றர் தொலைவிலும் ரஷ்யாவின் ஏங்கெல்ஸ் விமான தளம் அமைந்துள்ளது. டிசெம்பர் 5 அன்று அந்த இடத்தில் உக்ரைனிய ட்ரோன்கள் தாக்குதல் நடத்த முயன்றன. எனினும், ரஷ்யா அவற்றை சுட்டு வீழ்த்தியது. (அ)

# அதி நவீன விமானங்களை ஈரானிற்கு வழங்கும் ரஷ்யா!



மொஸ்கோ, டிசெ. 27

ஈரானுக்கு 24 சுஹோய் எஸ்.யு.- 35 போர் விமானங்களை "மிக விரைவில்" ரஷ்யா வழங்கும் என்று இஸ்ரேலிய தொலைக்காட்சி தெரிவித்துள்ளது.

பெயரிடப்படாத மேற்கத்திய உளவுத்துறை ஆதாரங்களை மேற்கோள் காட்டி இந்த தகவலை வெளியிட்டுள்ளது. இந்த தகவல் உண்மையானால், ஈரானின் விமானப் படை உயர்தர இராணுவ விமானங்கள் இல்லாத குறையை ஓரளவு சரி செய்யும்.

"விற்பனை செய்யப்படாத உபரிக்காக ரஷ்யர்கள் வாங்குபவர்களைத் தேடிக்கொண்டிருந்தனர், மேலும் ஈரான் அந்த விமானங்களை மிக விரைவில் பெறுவார்கள் என்று தெரிகிறது" என்று அறிக்கை கூறுகிறது.

ஈரானிய விமானிகளுக்கு ஏற்கனவே சுஹோய் எஸ்.யு.-35 போர் விமானங்களை ஓட்ட பயிற்சி அளிக்கப்பட்டு வருவதாக இஸ்ரேலிய தொலைக்காட்சி தெரிவித்துள்ளது.

இந்த அறிக்கை குறித்து ஈரானோ அல்லது ரஷ்யவோ கருத்து தெரிவிக்கவில்லை.

ஈரான் அண்மையில் ரஷ்யாவிற்கு ட்ரோன்களை வழங்கியது. உக்ரைனில் வான் பாதுகாப்பை ஓரளவு சரி செய்து விட்டதாக மேற்கு நம்பியிருந்த சமயத்தில், அவர்களிற்கு பெருத்த தலையிடியாக இந்த ட்ரோன்கள் மாறின.

ஆளில்லா விமானங்களைத் தவிர, தரையிலிருந்து மேற்பரப்புக்கு ஏவப்படும் ஏவுகணைகளையும் ஈரானிடமிருந்து ரஷ்யா பெற முயல்கிறது. மலிவு விலையிலான இந்த ஆயுதங்கள் மேற்கத்தைய மூலோபாயத்திற்கு தொந்தரவாக அமைந்துள்ளன. (அ)

# அரச சார்பற்ற நிறுவனங்களுக்கு ஆப்கன் பெண்கள் செல்ல தடை!

காபூல், டிசெ. 27

ஆப்கானிஸ்தான் பெண்கள் அரச சார்பற்ற தொண்டு நிறுவினங்களில் வேலை செய்யத் தடை விதிக்கப்பட்டுள்ளது.

தலிபான் ஆட்சியாளர்களின் அந்த முடிவுக்கு ஐரோப்பிய ஒன்றியம் கண்டனம் தெரிவித்துள்ளது.

தலிபான்களின் புதிய விதியால், ஆப்கானிஸ்தானில் மேற்கொள்ளப்படும் உதவிப் பணிகள் பாதிக்கப்பட்டு நிலைமை மேலும் மோசமடையும் என அமெரிக்க வெளியுறவு அமைச்சர் அன்ரனி பிளிங்கன் எச்சரித்துள்ளார்.

ஆப்கானிஸ்தான் மக்கள் தொகையில் பாதிக்கும் மேற்பட்டோர் அல்லது சுமார் 25 மில்லியன் பேர் மனிதநேய உதவிகளைச் சார்ந்து இருக்கின்றனர்.

தலிபான்களின் தடை பல்வேறு திட்டங்களைப் பாதிக்கும் என ஐக்கிய நாடுகள் சபை எச்சரித்துள்ளது.

ஆப்கானிஸ்தான் அதிகாரிகளைச் சந்தித்துப் பேசவிருப்பதாகவும் அது குறிப்பிட்டது.

அரச சார்பற்ற அமைப்புகளில் வேலை செய்யும் பெண்கள் சிலர் முறையாக ஹிஜாப் அணிவதில்லை என்று புகார் செய்யப்பட்டதால் புதிய கட்டுப்பாடு விதிக்கப்பட்டுள்ளதாக ஆப்கானிஸ்தான் அதிகாரிகள் கூறினர்.

விதிகளை மீறும் அமைப்புகளின் செயல்பாட்டு உரிமம் தற்காலிகமாக ரத்து செய்யப்படும் என்று தலிபான்கள் கூறினர்.

ஆப்கானிஸ்தானில் உள்ள 180க்கும் மேற்பட்ட அரச சார்பற்ற அமைப்புகளுக்கு புதிய கட்டுப்பாடு பொருந்தும். ஆனால் பட்டியலில் ஐக்கிய நாடுகள் சபை சேர்த்துக் கொள்ளப்படவில்லை.

பெண்கள் பல்கலைக்கழகம் செல்ல தடை விதிக்கப்பட்ட சில நாட்களிலேயே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

ஏற்கனவே பொரும்பாலான மாகாணங்களில் உயர் பாடசாலைகள் பெண்களுக்கு மூடப்பட்டிருப்பதோடு பெண்கள் பூங்காக்கள், உடற்பயிற்சி நிலையங்கள் மற்றும் ஏனைய பொது இடங்களுக்குச் செல்லவும் தடை விதிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

பொக்ஸிங் டே டெஸ்ட்:

# தென்னாபிரிக்க அணியை 189 ஓட்டத்துக்கு சுருட்டியது ஆஸி!

மெல்பர்ன், டிசெ. 27

மெல்பர்ன் பொக்ஸிங் டே டெஸ்டில் தென்னாபிரிக்க அணி முதல் இனிங்ஸில் 189 ஓட்டங்களுக்கு ஆட்டமிழந்துள்ளது.

தென்னாபிரிக்க அணி அவுஸ்திரேலியாவுக்குச் சுற்றுப்பயணம் செய்து 3 டெஸ்ட்களில் விளையாடுகிறது. முதல் டெஸ்டில் இரு நாள்களில் தோல்வியடைந்தது. இந்நிலையில் மெல்பர்னில் நடைபெற்று வரும் பொக்ஸிங் டே டெஸ்டில் நாணயச் சுழற்சியில் வென்ற அவுஸ்திரேலிய அணி களத்தடுப்பைத் தெரிவு செய்தது.

இந்த டெஸ்டிலும் தென்னாபிரிக்க துடுப்பாட்ட வீரர்கள் மோசமாக துடுப்பெடுத்தாடினர். 67 ஓட்டங்களுக்கு முதல் 5 விக்கெட்களை இழந்தது.

இதன்பிறகு கைல் வெரைனும் யான்செனும் ஜோடி சேர்ந்து சரிவை ஓரளவு தடுத்து நிறுத்தினார்கள். வெரைன் 52, யான்சென் 59 ஓட்டங்களுக்கு ஆட்டமிழந்தார்கள். தென்னாபிரிக்க அணி 68.4 ஓவர்களில் 189 ஓட்டங்களுக்கு அனைத்து விக்கெட்களையும் இழந்தது. கமரூன் கிறீன் 5 விக்கெட்களையும் ஸ்ரார்க் 2 விக்கெட்களையும் எடுத்தார்கள்.



முதல் நாள் முடிவில் அவுஸ்திரேலிய அணி 12 ஓவர்களில் ஒரு விக்கெட் இழப்புக்கு 45 ஓட்டங்கள் எடுத்தது. வார்னர் 32, லபுஷேன் 5 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்காமல் இருந்தனர்.

# நியூசிலாந்துக்கு எதிரான டெஸ்ட் பாக். அணியில் ரிஸ்வான் நீக்கம்!

கராச்சி, டிசெ. 27

நியூசிலாந்துக்கு எதிரான முதல் டெஸ்டில் பாகிஸ்தானைச் சேர்ந்த பிரபல விக்கெட் காப்பாளரும் துடுப்பாட்ட வீரருமான ரிஸ்வான் நீக்கப்பட்டுள்ளார்.



நியூசிலாந்து அணி பாகிஸ்தானுக்கு சுற்றுப்பயணம் செய்து 2 டெஸ்ட்கள், 3 ஒருநாள் போட்டிகளில் விளையாடுகிறது. முதல் டெஸ்ட், கராச்சியில் நேற்று தொடங்கியது. கிட்டத்தட்ட 20 வருடங்களுக்குப் பிறகு பாகிஸ்தானில் நியூசிலாந்து அணி விளையாடுகிறது.

சமீபகாலமாக சொந்த மண்ணில் தொடர்ந்து 4 டெஸ்ட்களில் தோற்ற பாகிஸ்தான் அணி, இந்த டெஸ்டில் பிரபல விக்கெட் காப்பாளர் ரிஸ்வானை நீக்கி, சர்பராஸ் அஹமதுவை அணியில் சேர்த்துள்ளது.

அவர் கடைசியாக 2019 ஜனவரியில் டெஸ்ட் கிரிக்கெட்டில் விளையாடினார். மேலும் முதல்முறையாக பாகிஸ்தானில் டெஸ்ட் விளையாடுகிறார். 2018 இல் ஒரு டெஸ்டில் விளையாடிய வேகப்பந்து வீச்சாளர் மிர் ஹம்சாவுக்கு அணியில் இடம் கிடைத்துள்ளது.

# ஆஸியின் உயர் விருதுக்கு ஷேன் வோர்னின் பெயர்!

சிட்னி, டிசெ. 27

அவுஸ்திரேலியாவின் வருடத்தின் மிகச் சிறந்த டெஸ்ட் கிரிக்கெட் வீரர் விருதுக்கு ஷேன் வோர்னின் பெயர் சூட்டப்படும் என அதிகாரிகள் நேற்று அறிவித்தனர்.

உலகின் தலைசிறந்த கிரிக்கெட் பந்துவீச்சாளர்களில் ஒருவரான ஷேன் வோர்ண் கடந்த மார்ச் மாதம் தனது 52 ஆவது வயதில் காலமானார்.

இந்நிலையில், வருடத்தின் மிகச் சிறந்த டெஸ்ட் வீரருக்கான (ஆடவர்) விருது ஷேன் வோர்ணின் பெயரில் வழங்கப்படும் என கிரிக்கெட் அவுஸ்திரேலியா நிறுவனம் நேற்று திங்கட்கிழமை தெரிவித்துள்ளது.

அனைத்து வகையான கிரிக்கெட்டிலும் சிறந்த வீரருக்கான விருது அலன் போர்டரின் பெயரில் வழங்கப்படும். அதற்கு அடுத்து மிக உயர் விருதாக ஷேன் வோர்ண் விருது அமையவுள்ளது.

அவுஸ்திரேலிய, தென்னாபிரிக்க அணிகளுக்கு இடையிலான டெஸ்ட் கிரிக்கெட் தொடரின் முதல் நாளில் இந்த அறிவிப்பு வெளியாகியுள்ளது. 145 டெஸ்ட் போட்டிகளில் 708 விக்கெட் களையும் 194 ஒருநாள் சர்வதேச போட்டிகளில் 293 விக்கெட்களையும் ஷேன் வோர்ண் அவுஸ்தி ரேலிய அணிக்காக கைப்பற்றியிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

# றொனால்டோ - மெஸ்ஸி இருவரில் சிறந்தவர் யார்?

சென்னை, டிசெ. 27

உலகில் எப்போதுமே சிறந்த வீரர் யார்? என்ற ஒப்பீடு இருந்து கொண்டே இருக்கும். அந்த வகையில் போர்த்துக்கல் வீரர் றொனால்டோ மற்றும் ஆர்ஜென்ரீன வீரர் மெஸ்ஸி இடையிலான ஒப்பீடுகள் எப்போதும் இருக்கும். இருவரின் ரசிகர்களும் மிகவும் தீவிரமாக அதுகுறித்து விவாதிப்பது வழக்கம்.

அது சர்வதேச போட்டிகள் என்றாலும் சரி, கழக அளவிலான போட்டிகள் என்றாலும் சரி. இந்த ஒப்பீடுகள் ஓயவே ஓயாது. ஏனெனில், இருவரும் தரமான வீரர்கள். ஒருவரின் ஆட்டம் அதிரடி ரகம் என்றால். மற்றொருவரின் ஆட்டம் கிளாஸாக இருக்கும். இருவரும் கால்பந்து உலகின் எந்நேரமும் சிறந்த வீரர்களின் பட்டியலில் இடம்பெற்றவர்கள்.

பல்வேறு சாதனைகளை உதைபந்தாட்ட உலகில் படைத்தவர்கள். கழக மற்றும் சர்வதேச அளவில் என ஒட்டு மொத்தமாக 1,145 போட்டி களில் விளையாடியுள்ளார் றொனால்டோ. இதன் மூலம் 819 கோல்கள் மற்றும் 234 கோல் அடிப்பதற்கான உதவிகளையும் செய்துள்ளார். மெஸ் ஸியோ 1,003 போட்டிகளில் விளையாடி 793 கோல்கள் மற்றும் 350 கோல் அடிப்ப தற்கான உதவிகளையும் செய் துள்ளார். இது அண்மையில் முடிந்த உலகக்கோப்பை இறு திப் போட்டிக்கு பிந்தையதானது.

# தமிழ் வீரர் அஸ்வின் புதிய உலக சாதனை!

மிர்பூர், டிசெ. 27



இந்திய அணியின் ரவிச்சந்திரன் அஸ்வின் பங்களாதேஷுக்கு எதிரான இரண்டாவது டெஸ்ட் போட்டியில் புதிய உலக சாதனை படைத்துள்ளார்.

பங்களாதேஷ் அணிக்கு எதிரான 2ஆவது மற்றும் கடைசி டெஸ்ட் போட்டியில் இந்திய அணி 3 விக் கெட்கள் வித்தியாசத்தில் த்ரில் வெற்றியைப் பதிவு செய்தது.

இந்த நிலையில், இந்திய அணியின் நட்சத்திர சுழல் பந்துவீச்சாளர் ரவிச்சந்திரன் அஸ்வின், சர்வதேச டெஸ்ட் போட்டிகளில் 3000 ஓட்டங்கள் மற்றும் 400 விக்கெட்கள் எடுத்த 6ஆவது வீரர் என்ற புதிய உலக சாதனையைப் படைத்துள்ளார்.

இதற்கு முன்னதாக கபில் தேவ், ஷேன் பொலாக், ஸ்டுவர்ட் பிரோட், ஷேன் வோர்ண் மற்றும் சேர் ரிச்சர்ட் ஹாட்லி ஆகிய 5 கிரிக்கெட் வீரர்களும் இந்த சாதனையைப் படைத்துள்ளனர். அந்த வரிசையில் 6வது வீரராக தமிழக வீரர் அஸ்வின் இணைந்துள்ளார்.

இந்த சாதனையை அவர் பங்களாதேஷுக்கு எதிரான 2வது டெஸ்ட் போட்டியின் இரண்டாவது நாளின்போது படைத்தார். அதேபோல டெஸ்ட் போட்டிகளில் குறுகிய காலத்தில் 450 விக்கெட்களைக் கடந்த வீரர் என்ற சாதனையையும் அவர் படைக்க உள்ளார்.

தற்போது அவர் டெஸ்ட் போட்டிகளில் 447 விக்கெட்களை எடுத்துள்ளார்.

இந்திய அணியின் முன்னாள் வீரர் அனில் கும்ப்ளே குறைந்த டெஸ்ட் போட்டிகளில் விளையாடி 450 விக்கெட்களை எடுத்த இந்திய வீரர் என்ற சாதனையை தன்வசம் வைத்துள்ளார். அவர் இந்த சாதனையை தான் விளையாடிய 93ஆவது டெஸ்ட் போட்டியில் படைத்திருந்தார்.

அனில் கும்ப்ளேயின் இந்த சாதனையை முறியடித்து டெஸ்ட் போட்டிகளில் அதிவேகமாக 450 விக்கெட்களை எடுத்த இந்திய வீரர் என்ற சாதனையைப் படைக்க அஸ்வினுக்கு இன்னும் 4 விக்கெட்களே தேவைப்படுகின்றன.

பங்களாதேஷுக்கு எதிராக ரவிச்சந்திரன் அஸ்வின் விளையாடிய இரண்டாவது டெஸ்ட் போட்டி அவரின் 88ஆவது சர்வதேச டெஸ்ட் போட்டி என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)



இந்நிலையில, நடப்பு 2022ஆம் ஆண்டில் றொனால்டோ 51 போட்டிக ளில் விளையாடி 16 கோல்களை பதிவு செய்துள்ளார். 5 முறை சக வீரர் கோலி பதிவு செய்ய கோல்களுக்கு உதவியுள்ளார். மெஸ்ஸி, 49 போட்டிகளில் விளையாடி 35 கோல்கள் பதிவு செய்துள்ளார். 33 முறை சக வீரர்கள் கோல்கள் அடிக்க உதவியுள்ளார். (ஐ)

# வர்த்தகர் தினேஷ் ஷாப்டருக்கு ரூபா 2000 கோடி வரை இழப்பு!

## வீட்டை விற்கவும் விளம்பரம் செய்தாராம்

கொழும்பு, டிசெ. 27

ஜனசக்தி குழுமத்தின் பணிப்பாளர் தினேஷ் ஷாப்டர் தற்கொலை செய்து கொண்டாரா என்ற கோணத்திலும் சிஐடியினர் விசாரணைகளை முன்னெடுத்துவருகின்றனர் என தகவல் வெளியாகியுள்ளது.

அத்துடன், தினேஷ் ஷாப்டரின் மரணம் தொடர்பில் இதுவரை 70 பேரிடம் வாக்குமூலம் பதிவுசெய்யப்பட்டுள்ளது.

சம்பவ தினத்தன்று தினேஷ் ஷாப்டர் பயணித்த காரில் வேறு எவரும் பயணிக்கவில்லை என்பதற்கு சி.சி.ரி.வி காட்சிகளில் தெளிவான ஆதாரம் இருந்தாலும், அது தொடர்பில் மேலதிக விசாரணைகள் தொடர்கின்றன.

பல நிறுவனங்களின் உரிமையாளரான தினேஷ் ஷாப்டர்,



பல கோடி ரூபாயை வர்த்தக நடவடிக்கைகளில் முதலீடு செய்தும், எதிர்பார்த்தபடி பணத்தை மீளப் பெற முடியாமல் நாளுக்கு நாள் நட்டமடைந்துள்ளார்.

நுவரெலியா பிரதேசத்தில் கொள்வனவு செய்யப்பட்ட சுமார் 300 கோடி ரூபா பெறுமதியான காணியொன்று மாகாண வீதி அபிவிருத்தி அதிகாரசபையிடம் கையளிக்கப்பட்டுள்ளமை, யாழ்.பிரதேசத்தைச் சேர்ந்த ஒருவரின் வர்த்தகத்தில் முதலீடு செய்யப்பட்ட 85 கோடி ரூபா மீளப் பெற்றுக்கொள்ள முடியாமை தொடர்பான சிக்கல் நிலை, கிரிக்கெட் வர்ணனையாளர் பிரையன் தோமஸுக்கு கொடுக்கப்பட்ட 160 கோடி ரூபாயில் சிக்கல் ஏற்பட்டுள்ளதாகவும், மேலும் பல வியாபாரப் பரிவர்த்தனைகளில் அவருக்கு 2,000 கோடி ரூபாய் நட்டம் ஏற்பட்டுள்ளதாகவும் நெருங்கிய குடும்பத்தினரின் வாக்குமூலத்தின் மூலம் தற்போது தெரியவந்துள்ளது.

மேலும், அவர் வசிக்கும் குருந்துவத்தை, மல் வீதியில் உள்ள வீட்டை விற்பனை செய்வதாக பத்திரிகை ஒன்றில் விளம்பரம் வெளியாகியிருந்ததாக குடும்பத்தின் நெருங்கிய உறவினர்கள் தெரிவித்துள்ளனர். (அ)



# மன்னார் மாவட்டத்தில் சுனாமி நினைவேந்தல்

மன்னார், டிசெ. 27

சுனாமி அனர்த்தம் இடம்பெற்ற நேற்றுடன் 18 வருடங்கள் ஆகின்ற நிலையில் தேசிய பாதுகாப்பு தினம் நாடு முழுவதும் அனுஷ்டிக்கப் பட்டது.

அதற்கமைய மன்னார் மாவட்டத்திலும் சுனாமி நினைவேந்தல் நிகழ்வுகள் நேற்று திங்கட்கிழமை காலை இடம்பெற்றன.

மன்னார் மாவட்ட செயலகத்தில் தேசிய பாதுகாப்பு தினம் அனுஷ்டிக்கப்பட்டது. மன்னார் மாவட்ட செயலக அனர்த்த முகாமைத்துவப் பிரிவு ஏற்பாடு செய்த சுனாமி நினைவேந்தல் நிகழ்வு மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி ஏ.ஸ்ரான்லி டிமெல் தலைமையில் இடம்பெற்றது.

காலை 9.27மணியளவில் சுனாமி அனர்த்தத்தில் உயிரிழந்த மக்களுக்கு அஞ்சலி செலுத்தப்பட்டது. இதன் போது தீபம் ஏற்றி,மலர் தூவி அஞ்சலி செலுத்தப்பட்டது.

குறித்த நினைவேந்தல் நிகழ்வில் சர்வமத தலைவர்கள், திணைக்களத்தலைவர்கள் கலந்து கொண்டனர்.

இதேவேளை, மன்னார் கலங்கரை கலை இலக்கிய நற்பனி மன்றத்தின் ஏற்பாட்டில், அதன் இயக்குநர் மோகன்ராஜ் தலைமையில் மன்னார் பிரதான பாலத்தடியில் சுனாமி நினைவேந்தல் இடம் பெற்றது.

இதன்போது சுனாமி அனர்த்தத்தில் உயிர் நீத்த உறவுகளை நினைவு கூர்ந்து சுடர் ஏற்றப்பட்டு மலர் தூவி அஞ்சலி செலுத்தப்பட்டது.

குறித்த நினைவேந்தல் நிகழ்வில் உள்ளூராட்சி மன்றங்களின் உறுப்பினர்கள்,பொது அமைப்புகளின் பிரதிநிதிகள் என பலர் கலந்து கொண்டு அஞ்சலி செலுத்தினர். (அ)

# மொட்டு உறுப்பினர்கள் இருவர் எதிர்க்கட்சியில் அமரத் தயார்?

கொழும்பு, டிசெ. 27

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் இரண்டு உறுப்பினர்கள் விரைவில் எதிர்க்கட்சியில் அமரத் தயாராகி வருவதாக அரசியல் வட்டாரத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இவர்களில் ஒரு எம்.பி., மாவட்டத் தலைவராக உள்ளார். அமைச்சராகவும் சில காலம் பணியாற்றினார்.

அரசாங்கத்தின் செயற்பாடுகளால் ஏமாற்றம் அடைந்த நிலையில் இருவரும் எதிர்க்கட்சியில் இணைய தீர்மானித்ததாக அந்த வட்டாரங்கள் குறிப்பிட்டன.

இந்த இரண்டு எம்.பி.க்களும் இதுவரை அரசாங்கத்திடம் இருந்து எவ்வித பரிசீலனையும் பெறவில்லை என்பதும் அறியப்படுகிறது.

ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின் உறுப்பினர்கள் பல்வேறு காரணங்களால் ஏமாற்றமடைந்த நிலையில் இதற்கு முன்னர் எதிர்க்கட்சியில் அமர்ந்திருந்தனர். (அ)

# நாட்டின் எரிபொருள் தேவை தொடர்ந்து குறைடைகின்றது

கொழும்பு, டிசெ. 27

நாட்டில் எரிபொருளுக்கான தினசரி தேவை தொடர்ந்து குறைவாகவே உள்ளது.

இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம், நுகர்வு வீழ்ச்சி, எரிபொருள் விநியோகத்தை மட்டுப்படுத்தும் கி.யூ. குறியீட்டு முறை மற்றும் தற்போது நிலவும் பொருளாதார நெருக்கடி என்பன தேவை குறைவதற்கு காரணம் என தெரிவித்துள்ளது.

இதேவேளை, உள்நாட்டில் எரிபொருள் விலை அடுத்த சில மாதங்களில் குறைக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

உக்ரைன் போர் உச்சக்கட்டத்தின் போது மசகு எண்ணெய் விலை கணிசமாக அதிகரித்த போதிலும், சர்வதேச சந்தையில் விலை குறைந்துள்ள நிலையில், அடுத்த சில மாதங்களில் விலை மேலும் குறையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. (அ)

# அரச விடுமுறைகள் அதிகமான நாடுகளின் பட்டியலில் இலங்கைக்கு நான்காவது இடம்

கொழும்பு, டிசெ. 27

உலகில் அரச விடுமுறைகள் அதிகம் வழங்கப்பட்ட நாடுகளின் பட்டியலில் இலங்கையும் உள்ளடக்கப்பட்டுள்ளது.

190 நாடுகளை உள்ளடக்கி மேற்கொள்ளப்பட்ட ஆய்வில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த வகையில் இலங்கை 4 ஆம் இடத்தில் தரப்படுத்தப்பட்டுள்ளதோடு முதல் இடத்தை மியன்மார் பெற்றுள்ளதுடன், அந்தநாட்டில் நடப்பாண்டில் மாத்திரம் 32 அரச விடுமுறைகள் வழங்கப்பட்டுள்ளன.

மேலும் நேபாளம் இரண்டாம் இடத்திலும், ஈரான் 3ஆம் இடத்திலும் தரப்படுத்தப்பட்டுள்ளன.

அத்துடன் இலங்கை இந்த பட்டியலில் 4ஆம் இடத்தில் தரப்படுத்தப்பட்டுள்ள நிலையில், இந்தவருடத்தில் இது வரை 25 அரச விடுமுறைகள் வழங்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

# சுனாமியில் உயிரிழந்தவர்களுக்கு மலையகத்திலும் நேற்று அஞ்சலி

கொழும்பு, டிசெ. 27

சுனாமி ஆழிப்பேரலை இடம்பெற்று 18 ஆண்டு நிறைவடைவதை நினைவுகூரும் வகையில் உயிரிழந்த உறவுகளுக்கு மலையக மக்கள் நேற்று தமது அஞ்சலியை செலுத்தினர்.

கடந்த 2004 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் 26ஆம் திகதி இலங்கையின் வரலாற்றில் மிகவும் துயரகரமான நிகழ்வாக காலை 9.25 மணிக்கு ஆழிப் பேரலை அனர்த்தம் இடம்பெற்றது.

இவ் அனர்த்தத்தில் உயிர்நீத்த இலங்கை உறவுகளுக்கு தமது அஞ்சலியை மலையக மக்களும் செலுத்தினர்.

ஹற்றன் பொலிஸார், நகர வர்த்தகர்களின் ஏற்பாட்டில் ஹற்றன் புத்தர் சிலைக்கு முன்னால் இடம்பெற்ற அஞ்சலி செலுத்தும் நிகழ்வுகளில் ஹற்றன் நகரில் உள்ள வங்கி ஊழியர்கள், நகர வர்த்தகர்கள், சாரதிகள் சங்க உறுப்பினர்கள், ஆசிரியர்கள், பொது மக்கள் என அனைவரும் கலந்துகொண்டனர். (அ)

# சீரற்ற காலநிலை காரணமாக 109 வீடுகள் சேதமடைந்துள்ளன

சீரற்ற காலநிலை காரணமாக இருவர் உயிரிழந்துள்ளதுடன் ஏழு பேர் காயமடைந்துள்ளனர்.

நாடு முழுவதும் நிலவும் சீரற்ற கால நிலையால் பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை 1,675 ஆக அதிகரித்துள்ளது.

கடும் மழை மற்றும் பலத்த காற்றினால் நான்கு மாவட்டங்களில் 387 குடும்பங்கள் பாதிக்கப்பட்டுள்ளதாக அனர்த்த முகாமைத்துவ நிலையம் தெரிவித்துள்ளது.

கடந்த இரண்டு நாட்களில் மோசமான வானிலை காரணமாக ஒரு வீடு இடிந்துள்ளதுடன் மேலும் 109 வீடுகள் சேதமடைந்துள்ளன. (அ)

# 670 இற்கும் மேற்பட்ட பொருட்களுக்கு விதிக்கப்பட்ட இறக்குமதி தடை நீக்கம்?

கொழும்பு, டிசெ. 27

உள்நாட்டில் உற்பத்தி செய்யக்கூடிய பொருட்கள் தவிர 670 ற்கும் மேற்பட்ட பொருட்களுக்கு விதிக்கப்பட்ட இறக்குமதி தடையை நீக்க நிதி அமைச்சு தீர்மானித்துள்ளது.

நாட்டில் ஏற்பட்ட அந்நிய செலாவணி பிரச்னை மற்றும் பொருளாதார நெருக்கடியை அடுத்து 1465 பொருட்களை இறக்குமதி செய்வதற்கு இலங்கை அரசாங்கம் தடை விதித்திருந்தது.

இந்நிலையில் 670 ற்கும் மேற்பட்ட பொருட்களுக்கான தடையை நீக்குவது குறித்து பரிசீலித்து வருவதாக நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியாம்பலாப்பிட்டிய தெரிவித்தார்.

ஏற்கனவே 795 பொருட்களுக்கான இறக்குமதி கட்டுப்பாடுகள் நீக்கப்பட்டுள்ள நிலையில் மிகுதி பொருட்களுக்கான தடையையும் நீக்குவது குறித்து பரிசீலிப்பதாக அவர் கூறினார்.



காத்தாடிகள், மூங்கில் பொருட்கள் மற்றும் உள்நாட்டில் உற்பத்தி செய்யக்கூடிய பொருட்களை இறக்குமதி செய்ய வேண்டுமா என்று மக்கள் சிந்திக்க வேண்டும் என அவர் குறிப்பிட்டார்.

எவ்வாறாயினும் நாட்டில் தாராளமாக கிடைக்கும் அல்லது உள்நாட்டிலேயே உற்பத்தி செய்யக் கூடிய சில பொருட்கள் இறக்குமதியை அரசாங்கம் முற்றாக தடை செய்ய வேண்டும் என்றும் தெரிவித்தார். (அ)

## இந்திய...

வருகின்றன.

நாட்டில் ஜனாதிபதியாக பதவியேற்பவர் உத்தியோகபூர்வமாக இந்தியாவுக்கு சம்பிரதாயபூர்வ பயணத்தை மேற்கொளவது வழக்கம். இந்தப் பயணத்துக்கு ஜனாதிபதி ரணிலுக்கு இதுவரை அழைப்பு எதுவும் விடுக்கப்படவில்லை. இந்நிலையில், இந்திய ஆசியை பெற்றுவிடும் நோக்கில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பல முயற்சிகளை எடுத்து வருகிறார். இதுவரை அவை நடக்கவில்லை.

இந்த நிலையிலேயே, ராம் மாதவுடனான சந்திப்பு நிகழவுள்ளது. ராம் மாதவ் பா. ஜ. கவின் தேசிய செயலர் ஆவார். இவர், இந்தியப் பிரதமர் நரேந்திர மோடிக்கு மிகவும் நெருக்கமானவராகவும் கட்சியில் உச்ச அதிகாரம் படைத்த ஒருவராகவும் உள்ளார். இவர் மூலமாக பிரதமர் மோடியை அணுகும் வாய்ப்பைப் பெற விரும்புகிறார் என்று கூறப்படுகின்றது.

இதேநேரம், இனப் பிரச்னைக்கு தீர்வு காணுமாறு இந்தியா அழுத்தங்களை பிரயோகித்து வருவதாக இராஜதந்திர மட்டங்களில் பேச்சு உள்ளது. அண்மைக்காலமாக இந்திய உயர் அதிகாரிகள் நேரடியாகவும் மறைமுகமாகவும்சந்திப்புக்களை நடத்தி அழுத்தங்களை பிரயோகிப்பதுடன் விடயங்களையும் கேட்டு வருகின்றனர் என்று கூறப்படுகிறது. ராம் மாதவ் ஊடாகவும் அவ்வாறான ஓர் அழுத்தம் விடுக்கப்படலாம் என்றும் எமது மூலங்கள் தெரிவிக்கின்றன. (ஐ-சி)

## யாழ்...

இராஜாங்க அமைச்சு ஒன்றின் செயலாளராக நியமிக்கப்படவுள்ளார் என்றும் தெரியவருகிறது.

இதேவேளை, வெற்றிடமாகும் யாழ். மாவட்ட அரச அதிபர் பதவிக்கு தற்போதைய கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் திருமதி ரூபாவதி கேதீஸ்வரன் நியமிக்கப்படலாம் என்றும் தகவல்கள் வெளியாகியுள்ளன. இதேசமயம், கிளிநொச்சி மாவட்டத்துக்கு புதியவர் ஒருவர் அரச அதிபராக நியமிக்கப்படலாம் எனவும் தெரிவிக்கின்றன. (ஐ)

## தீர்வு...

பேச்சாளர் கு. சுரேந்திரன் விடுத்துள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டவை வருமாறு,

"இன்றைய அரசியல் சூழலையில் எரிக் சொல்ஹெய்மின் தகுதி என்ன? எந்த நாட்டின் பிரதிநிதியாக அவர் செயல்படுகிறார்? யாருடைய தூண்டுதலில் தமிழ் மக்களின் அரசியல் விடயங்கள் பற்றி கருத்துக்கூற முற்படுகிறார்? அல்லது யாரை திருப்திப்படுத்த முனைகிறார்? என்ற கேள்விகளுக்கு பதிலளிப்பாரா?

மேலும் அவருடைய ஆலோசனையையோ, தலையீட்டையோ, கருத்துக்களையோ தமிழ் தலைவர்கள் யாரும் கோரவில்லை. யுத்தம் முடிவடைந்த பின்னர் இவ்வளவு காலமும் தமிழ் மக்கள் நீதி, மனித உரிமைகள், நல்லிணக்கம் மற்றும் அரசியல் தீர்வு விடயங்கள் தொடர்கதையாகி பல சிரமங்களை எதிர்கொண்டபோது இப்போது கருத்துச் சொல்பவர்கள் எங்கு சென்றார்கள்?

ஒருமித்த நிலையில் தமிழ்த் தலைவர்கள் பயணிக்காமல் தனித்தோட முயற்சி செய்வதாலேயே இப்படியான கருத்துக்களை சிலர் சொல்வதும் தமிழ் மக்களை நட்டாற்றில் தள்ளி விடுவதுமாக வரலாறு கடந்திருக்கிறது. காலம் காலமாக புரையோடிப் போன தமிழ் மக்களின் இனப் பிரச்னையை தீர்ப்பதற்கான நடவடிக்கைகளை எப்படி முன் நகர்த்த வேண்டும் என்பதில் தமிழ்த் தலைவர்கள் ஒருமித்த நிலைப்பாட்டை எட்டியுள்ளனர். ஆகவே, எரிக் சொல்ஹெய்ம் தன்னுடைய உத்தியோபூர்வமான பணி எதுவோ அதைச் செய்வனே செய்யுமாறு கோருகிறோம் - என்றுள்ளது. (ஐ)

## கடன்...

தெரிவித்துள்ளார் என்று கொழும்பு தகவல்கள் தெரிவிக்கின்றன.

அண்மையில், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க முன்னாள் ஜனாதிபதிகளான மகிந்த, கோட்டாபய மற்றும் பஸில் ராஜபக்ஷ ஆகியோர் சந்தித்தனர். மகிந்த, கோட்டாபயவின் செயலாளராக முன்னர் பணியாற்றிய காமினி செனரத்தின் மகனின் திருமண நிகழ்வில் இடம்பெற்ற இந்த சந்திப்பிலேயே ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பஸில் ராஜபக்ஷவுக்கு இந்தத் தகவலை கூறினார் என்று கூறப்படுகின்றது.

பல வர்த்தகர்களும் பங்கேற்ற இந்தத் தருணத்தில் சர்வதேச நாணய நிதியத்துடனான (ஐ. எம். எவ். )கடன் முன்னேற்றம் குறித்துப் பேசப்பட்டது. இதன் போதே, ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கடன் மறுசீரமைப்புக்கு சீனா, இந்தியா உத்தியோகபற்றற்ற முறையில் இணக்கம் தெரிவித்துள்ளன என்றும், 2023முற்பகுதியில் ஐ. எம். எவ்வின் நிதி கிடைக்கும் என்றும் தெரிவித்துள்ளார். (ஐ-சி)

## கோட்டாபய...

அது பொய்யானது என்றும் அவருக்கு நெருக்கமான உயர்வட்டாரங்கள் உறுதிப்படுத்தின.

மேலும், கோட்டாபய ராஜபக்ஷ, அவரின் மனைவி அயோமா ராஜபக்ஷ, மகன் மனோஜ் ராஜபக்ஷ, மருமகள் எஸ். டி. ராஜபக்ஷ, பேர்த்தி உள்ளிட்டோர் நேற்று அதிகாலை டுபாய் நாட்டுக்கு பயணமாகினர். அங்கு சில நாட்கள் தங்கும் அவர்கள், பின்னர் ஐரோப்பிய நாடு ஒன்றுக்கு செல்லவுள்ளனர்.

விடுமுறையை களிக்கவே அவர்கள் வெளிநாடுகளுக்கு பயணமாகின்றனர் என்றும் அறிய வருகிறது.

இதேசமயம், முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ போராட்டங்கள் காரணமாக நாட்டை விட்டு வெளியேறி மாலைதீவுகள், சிங்கப்பூர், தாய்லாந்தில் தங்கியிருந்தபோது அமெரிக்க வீஸாவைப் பெற முயன்றார். ஆனால், அவருக்கு வீஸா மறுக்கப்பட்டதுடன், அதற்காக அவர் மேற்கொண்ட முயற்சிகளும் தோல்வியடைந்தன என்பதும் குறிப்பிடத்தக்கது. (ஐ-சி)

## கோவிட்...

மருத்துவர் வாசன் ரட்ணசிங்கம் தெரிவித்தார்.

சில நாடுகளில் கோவிட் தொற்று மீண்டும் அதிகரித்து வருகிறது. இந் நிலையில், இலங்கையின் நிலவரம் தொடர்பில் வினவிய போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

மேலும், சீனா, தென் கொரியா, ஜப்பான், தாய்வான், கொங்ஹொங் உள்ளிட்ட நாடுகளில் கோவிட் தொற்று மீண்டும் தீவிரமடைந்து வருகிறது. சீனாவில் குளிர் காலம் ஆரம்பித்துள்ளது. ஜனவரி இறுதியில் சீன புத்தாண்டை முன்னிட்டு கோவிட் பரவல் மேலும் அதிகரிக்கக்கூடும் என எதிர்பார்க்கப்படுகிறது. இதன் தாக்கம் ஏனைய நாடுகளிலும் காணப்படுகிறது.

இலங்கையைப் பொறுத்தமட்டில் கோவிட் தொற்று சுகாதார தரப்பினரின் கட்டுப்பாட்டில் உள்ளது. எவ்வாறிருப்பினும் தொற்று அதிகரிக்கக் கூடிய வாய்ப்புக்களும் காணப்படுகின்றன. எனவே, தொற்றா நோய்களால் பாதிக்கப்பட்டு ஆபத்தான நிலையிலுள்ளவர்கள் மிகவும் அவதானத்துடன் செயல்பட வேண்டும்.

தற்போது கோவிட் தொற்று மாத்திரமின்றி டெங்கு, இன்புளுவன்சா மற்றும் வாயு மாசடைவினால் ஏற்படக் கூடிய சுவாச நோய் எனப் பல பிரச்னை கள் காணப்படுகின்றன. எனவே நோயாளர்கள் மாத்திரமின்றி , சுகதேகிகளும் மிகவும் அவதானத்துடன் செயல் பட வேண்டும்.

அனைவரும் சுகாதார விதிமுறைகளை பின்பற்ற வேண்டியது அவசியமாகும் - என்றார். (ஐ)

# பேரவை ஊடாக அதிகாரத்தை கூட்டமைப்பினர் அணுகுவார்கள்!

## அதனாலேயே எதிர்க்கின்றனராம் - கம்மன்பில!

கொழும்பு, டிசெ. 27

தமிழ் தேசிய கூட்டமைப்பினர் அரசமைப்பு பேரவை ஊடாக அதிகார பகிர்வை அணுகுவார்கள் என்பதனால் கூட்டமைப்பினரின் பெயர் பரிந்துரையை எதிர்த்தோம். கூட்டமைப்பினர் ஒட்டுமொத்த தமிழ் மக்களின் பிரதிநிதிகள் அல்ல என்று பாராளுமன்ற உறுப்பினர் உதய கம்மன்பில தெரிவித்தார்.

அரசமைப்பு பேரவைக்கான உறுப்பினர் நியமனம் தொடர்பில் வினவிய போதே மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அரசமைப்பின் 21 ஆவது திருத்தம் நிறைவேற்றப்பட்டு இரு மாதங்கள் நிறைவுபெற்றுள்ள நிலையில் அரசமைப்பு பேரவைக்கான உறுப்பினர் நியமனம் இன்னும் இழுபறி நிலையில் உள்ளது. உறுப்பினர் நியமனத்தில் அரசியல் கட்சிகளுக்கிடையில் கருத்தொற்றுமை கிடையாது.

பெரும்பான்மை இனவாதத்தை தக்க வைத்துக் கொள்வதற்காகவும், சிறுபான்மை இனத்தவர்களுக்கு இடமளிக்கக்கூடாது என்பதற்காகவும் அரசமைப்பு பேரவைக்கு தமிழ் தேசிய கூட்டமைப்பினரின் பெயர் பரிந்து ரையை பாராளுமன்றத்தில் சுயாதீனமாக செயல்படும் தரப்பினர் எதிர்தரப்பினர் எதிர்த்தனர் என்று கூட்டமைப்பினர் குறிப்பிடுவது அடிப்படையற்றது.

தமது நோக்கங்களுக்காக மாத்திரம் செயல்படும் கூட்டமைப்பினரை அரசமைப்பு பேரவையின் உறுப்பினர்களாக நியமிப்பது சாத்தியமற்றது. தமிழ்த் தேசிய கூட்டமைப்பினர் அரசமைப்பு பேரவை ஊடாக அதிகார பகிர்வை அணுகுவார்கள் என்ற காரணத்தால் அவர்களின் பெயர் பரிந்துரையை நாங்கள் எதிர்த்தோம்- என்றார் (ஐ)

## தமிழ்...

தெரிவித்தார்.

ஜனாதிபதி மற்றும் தமிழ்த் தேசிய கட்சிகளுடனான சந்திப்பு தொடர் பில் கருத்து தெரி விக்கையில் அவர் இதனை தெரிவித்தார்.

மேலும், உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் நாங்கள் பிளவுபட்டு தனித்தனியாக கட்சிகள் போட்டியிடுவதன் மூலம் எங்களின் ஒற்றுமைக்கு பாதிப்பு ஏற்பட்டுள்ளது. நாங்கள் ஓர் அரசியல் தீர்வை எட்டுவதற்காக அரசாங்கத்துடன் பேச்சு ஆரம்பித்திருக்கின்ற நேரத்தில் தேர்தல் எவ்வாறு எத்தகைய முறையில் நடைபெறப் போகின்றது என்பது தெரியாத நிலையில், நாங்கள் விவாதத்துக்கு அனுமதிப்பது ஒட்டுமொத்த தமிழ் மக்கள் மத்தியில் பிளவை - குழப்பத்தை - பலவீனத்தை ஏற்படுத்திவிடும்.

மேலும், ஜனாதிபதியுடன் ஜனவரி மாதம் 10 ,11, 12ஆம் திகதிகளில் அரசமைப்பை உருவாக்குவதற்கும் - தமிழ் மக்களின் பிரச்னையை தீர்ப்பதற்கும் திகதிகள் குறிக்கப்பட்டுள்ளன. இதற்கு முன்னதாக தமிழ்த் தேசியம் தொடர்பில் செயல்பட்டுவருகின்ற கட்சிகள் ஒன்றிணைந்து குறித்த விடயங்கள் தொடர்பில் கலந்துரையாடி வருகின்ற நிலையில் அதன் தொடர்ச்சியாக ஜனவரி 7, 8ஆம் திகதிகளில் கொழும்பில்கூடி அடுத்த கட்ட நடவடிக்கைகள் பற்றி ஆராயவுள்ளோம் - என்றார். (ஐ)

## இடமாற்றம்...

யாழ்ப்பாணம், கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர்களுக்கு பணி இடமாற்றங்கள் வழங்கப்பட்டுள்ளன என்று நேற்று தகவல்கள் வெளியாகின. இந்நிலையில் இது தொடர்பில் யாழ். மாவட்ட அரச அதிபரை தொடர்பு கொண்டு கேட்டபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

மேலும், எனக்கு எழுத்து மூலமாக இடமாற்றம் தொடர்பில் அறிவிக்கப்படவில்லை. எனினும், இந்த வருடத்தோடு ஓய்வு பெறுபவர்களின் இடங்களுக்கு புதிதாக நியமிக்கப்பட வேண்டியவர்களின் பட்டியல் ஒன்று தயாரிக்கப்படுகின்றது.

உள்நாட்டு அலுவல்கள் அமைச்சினால் அந்த பட்டியல் தயாரிக்கப்பட்டுள்ளதாக அறிய முடிகின்றது. எங்களின் பெயர்களும் அந்த பட்டியலில் சேர்க்கப்பட்டிருக்கின்றன என்று தகவல் கிடைத்திருக்கிறதே தவிர, எனக்கு இடமாற்றல் தொடர்பில் எழுத்து மூலமாக அறிவிப்பு எதுவும் கிடைக்கவில்லை - என்றும் கூறினார். (ஐ)

# பொன். தியாகத்தின் மனைவி காலமானார்!



யாழ்ப்பாணம், டிசெ. 27

தமிழீழ விடுதலைப் புலிகளின் முக்கியஸ்தரும் மாவீரர் பணிமனையின் பொறுப்பாளராக வும் இருந்த பொன். தியாகம் அவர்களின் மனைவி திருமதி கிறிஸ்ரின் தில்லை நாயகம் காலமானார்.

மூன்று மாவீரர்களின் தாயாரான இவர் வெளிநாடொன்றில் வசித்து வந்த நிலையில் நேற்றுமுன்தினம் காலமானார். (ஐ)

## காவு...

நிலநடுக்கம் ஆழிப்பேரலையை (சுனாமி) ஏற்படுத்தியது. இந்தப் பேரலை இலங்கை, இந்தியா, இந் தோனேசியா, தாய்லாந்து, மாலை தீவுகள் உள்ளிட்ட 6 நாடுகளை தாக்கி யது. சுமார் இரண்டு இலட்சத்துக்கும் மேற்பட்டவர்கள் பலியாகினர்.

இலங்கையில் வடக்கு, கிழக்கு மாவட்டங்கள் உட்பட 14 மாவட்டங்களை தாக்கியது. 35 ஆயிரத்து 233 பேர் உயிரிழந்தனர். இந்த பேரனர்த் தத்தின் 18ஆவது ஆண்டு நினைவேந்தல் நேற்று நாடு முழுவதும் நினைவுகூரப் பட்டது.

யாழ்ப்பாணத்தில் அதிக அழிவைச் சந்தித்த வடமராட்சி கிழக்கிலும் யாழ். மாவட்டத்தின் ஏனைய பகுதிகளிலும் நினைவேந்தல்கள் நடைபெற்றன. பிரதான நினைவேந்தல் உடுத்துறை சுனாமி நினைவாலயத்தில் நடைபெற்றது. தவிர, வெற்றிலைக்கேணி, கட்டைக்காடு, தாளையடி, மணல்காடு, தும்பளை ஆகிய பகுதிகள், யாழ். பல்கலைக்கழகம், அரசியல் கட்சி அலுவலகங்கள் , அரச அலுவலகங்களிலும் நடைபெற்றன.

முல்லைத்தீவு சுனாமி நினைவாலயம், புதுக்குடியிருப்பு, முள்ளியவளை, முல்லைத்தீவு மாவட்ட செயலகம், மன்னார் மாவட்டம், கிளிநொச்சி மாவட்டத்திலும் சுனாமியில் கொல்லப்பட்டவர்களுக்கு அஞ்சலி நிகழ்வுகள் நடைபெற்றன.

தவிர, கிழக்கு மாகாணத்தின் மட்டக்களப்பு மாவட்டத்தின் கடலோர கிராமங்கள், மாவட்ட செயலகத்திலும், திருகோணமலையில் சுனாமி பாதித்த பகுதிகளிலும் அம்பாறையில் திருக்கோவில், காரைதீவு, அம்பாறை நகரப் பகுதி மற்றும் கரையோரப் பகுதிகளிலும் நினைவேந்தல்கள் நடைபெற்றன.

மேலும் ஆழிப்பேரலையில் மக்கள் கொல்லப்பட்ட அம்பாந்தோட்டை, மாத்தறை, காலி மாவட்டங்களிலும் மற்றும் நாட்டின் ஏனைய பகுதிகளிலும் நினைவேந்தல்கள் முன்னெடுக்கப்பட்டன. (ஐ)

ஈழநாடு
Eelanadu

# பெண்ணை துஷ்பிரயோகம் செய்ய முயன்றவர் கைது!

யாழ்ப்பாணம், டிசெ. 27

யாழ்ப்பாணம் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பகுதியில் கணவனின் கழுத்தில் கத்தியை வைத்து மிரட்டி மனைவியை துஷ்பிரயோகம் செய்ய முயன்ற ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

இதேவேளை, சம்பவத்துடன் தொடர்புடையதாகக் கூறப்படும் மேலும் இருவரை பொலிஸார் தேடி வருகின்றனர்.

சம்பவம் தொடர்பில் தெரியவருவதாவது,

கடந்த சில தினங்களுக்கு முன்னர், இரவு வேளை வீடொன்றினுள் அத்துமீறி கூரிய ஆயுதங்களுடன் நுழைந்த மூவர், வீட்டில் இருந்த கணவனின் கழுத்தில் கத்தியை வைத்து மிரட்டி, மனைவியை துஷ்பிரயோகம் செய்ய முயன்றனர்.

இதன்போது, அவர்கள் அபய குரல் எழுப்பவே, வீட்டினுள் நுழைந்த மூவரும், அவர்களை தாக்கி விட்டு அங்கிருந்து தப்பி சென்றனர்.

சம்பவம் தொடர்பில் யாழ்ப்பாண பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டதை அடுத்து, பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வந்த நிலையில், சம்பவத்துடன் தொடர்புடைய குற்றச்சாட்டில் இளைஞன் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

ஏனைய இருவரும் தலைமறைவாகி உள்ள நிலையில், கைது செய்யப்பட்டுள்ள இளைஞனை பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைத்து பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ள அதேவேளை, தலைமறைவாகியுள்ள இருவரையும் கைது செய்வதற்கு உரிய நடவடிக்கைகளை முன்னெ டுத்துள்ளனர். (ஐ)

# இராணுவ அதிகாரிக்கு எதிரான தடை; அமெரிக்காவுடன் முரண்படமுடியாது

## வெளியுறவு அமைச்சர் சுட்டிக்காட்டு

கொழும்பு, டிசெ. 27

இலங்கை இராணுவ அதிகாரிக்கு எதிராக அமெரிக்கா தடைகளை விதித்துள்ள நிலையில் அமெரிக்காவுக்கு எதிராக முரண்படமுடியாது என வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி தெரிவித்துள்ளார்.

2008 ஆம் ஆண்டு மே மாதம் ஊடகவியலாளர் கீத் நொயார் சித்திரவதை செய்யப்பட்ட சம்பவத்தில் மனித உரிமை மீறல் தொடர்பாக அமெரிக்க இராஜாங்கத் திணைக்களம் மேஜர் பிரபாத் புலத்வத்தவுக்கு எதிராக தடைகளை அறிவித்துள்ளது.

மேலும், உலகெங்கிலும் உள்ள ஊழல் மற்றும் மனித உரிமை மீறல்களுக்கு பொறுப்புக்கூறலை ஊக்குவிக்கும் வகையில் இந்த தடைகள் விதிக்கப்பட்டுள்ளதாக அமெரிக்க இராஜாங்கத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இந்நிலையில் இலங்கை அதிகாரிகள் கடந்த வாரம் அமெரிக்காவின் இந்த நடவடிக்கை குறித்து கரிசனை வெளியிட்டபோதும் தனிப்பட்ட சம்பவங்கள் தொடர்பாக எதனையும் தெரிவிக்க முடியாது என வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி கூறினார். (அ)

# அரசமைப்பு பேரவைக்கு சிவில் பிரதிநிதிகள் வியாழக்கிழமை இறுதி முடிவு எடுக்கப்படும்

கொழும்பு, டிசெ. 27

அரசியலமைப்பு பேரவைக்கு சிவில் சமூக பிரதிநிதிகளை நியமிப்பது தொடர்பான இறுதித் தீர்மானம் எதிர்வரும் வியாழக்கிழமை எடுக்கப்பட உள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

21 ஆவது அரசியலமைப்பு திருத்தத்தின்படி நிறுவப்படும் அரசியலமைப்பு பேரவையில் பத்து உறுப் பினர்கள் உள்ளடக்கப்பட்டுள்ளனர்.

அதன்படி அரசியலமைப்பு பேரவையில் சிவில் சமூகப் பிரதிநிதிகளை நியமிப்பதற்கான விண்ணப்பங்கள் அண்மையில் கோரப்பட்டது.

இந்நிலையில் கிட்டத்தட்ட 120 விண்ணப்பங்கள் கிடைத்துள்ளதாகவும் சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன தெரிவித்தார். (அ)

# இலங்கையை விட்டு விலகும் காற்றழுத்த தாழ்வு மண்டலம்!

கொழும்பு, டிசெ. 27

நாட்டின் மேற்குப் பகுதியூடாக குறைந்த காற்றழுத்தத் தாழ்வு மண்டலம் படிப்படியாக இலங்கைக் கடற்கரையிலிருந்து நகர்ந்து வருவதாக வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இந்த அமைப்பு நாட்டை விட்டு நகர்வதால், வானிலையில் அதன் தாக்கம் நேற்று மாலை முதல் குறையும் என்று எதிர்பார்க்கப்பட்டது.

வானிலை முன்னறிவிப்பின்படி, இன்று செவ்வாய்க்கிழமை வடக்கு, வடமத்திய மற்றும் கிழக்கு மாகாணங்களில் பல தடவைகள் மழை பெய்யும்.

மேல், சப்ரகமுவ மற்றும் வடமேல் மாகாணங்களில் சில இடங்களில் பிற்பகல் அல்லது இரவு வேளையில் மழை அல்லது இடியுடன் கூடிய மழை பெய்யும். (அ)

# ஆழிப் பேரலை அழிவின் 18ஆம் ஆண்டு நினைவலைகள்...!








2004 டிசெம்பர் 26 ஆழிப்பேரலை அனர்த்தத்தில் கொல்லப்பட்டவர்களின் 18ஆவது ஆண்டு நினைவேந்தல் நேற்று வடமராட்சி கிழக்கு - உடுத்துறை சுனாமி பொது நினைவாலயத்தில் நடைபெற்றவேளை...! (படங்கள் : தமிழரசன்)





ஆழிப் பேரலையால் கொல்லப்பட்டவர்கள் நேற்று முல்லைத்தீவு சுனாமி நினைவாலயத்தில் நினைவுகூரப்பட்டபோது...! (படங்கள் - ச. தவசீலன்)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 27.12.2022 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.